தமிழ மாச

1-24

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி : ௧	ஆசிரியர் : ம. பொ. சிவஞானம்	பகுதி ௨௪

பொருளடக்கம்

கோவை மாநாடு — தலையங்கம் ... ௨
இந்த உலகம் — மு. வரதராசன் ... ௧௭
வடக்கெல்லை வேங்கடமே!
— ஆசிரியர் மங்கலங்கிழார் ... ௨௨
கருணைக் கடல் — வேணுகோபால் ... ௩௰
நம்மை அறிந்தோமா? — ரா. வைத்திலிங்கம் ... ௩௪
தொழிலரசு — ஞானம் ... ௩௮
விதவையின் புதிய வாழ்வு — சு. காசிநாதன் ... ௪௨
ஔவையார் ... ௪௫

விலை 4 அணா — 15-12-47

கோவை மாநாடு

அடுத்த ஜனவரி முதல் வாரத்தில் கோவையில் தமிழ்நாடு காங்கிரஸ் மாநாடு கூடப்போகிறது. அந்நிய ஆட்சியை வெளியேற்றிய பிறகு கூடும் மாகாண காங்கிரஸ் மாநாடு இதுவே முதலாவதாகும். எனவே, அதில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளின் பொறுப்பு மகத்தானது.

காங்கிரஸ் மகாசபை இனியும் தேவையா? தேவையானல், அதன் அமைப்பு இப்போதுள்ளது போன்றதுதான? மற்றும் அதன் வருங்கால வேலைத்திட்டங்கள் யாவை? என்பவைகளைப்பற்றி எல்லாம் கோவை மாநாட்டில் ஆலோசித்து முடிவுகட்ட வேண்டும்.

ஆங்கில ஆதிக்கத்தை வெளியேற்றவே காங்கிரஸ் தோன்றியது. எனவே, ஆகஸ்டு 15-ல் அந்நிய ஆட்சி மறைந்த நேரத்தோடு காங்கிரசின் அவசியமும் குறைந்து போயிற்று. ஆதலால், "ஆகஸ்டு 15க்குப் பிறகு காங்கிரஸ் வேண்டுமா?" என்ற ஐயம் பிறப்பதும், "வேண்டாம்!" என்று காங்கிரசிலேயே ஒரு சாரார் வலியுறுத்துவதும் இயல்பே ஆகும்.

காங்கிரஸ் தலைமையினர் இனியும் அந்த ஸ்தாபனத்தைத் தொடர்ந்து நடத்துவதென்ற முடிவுக்கு வந்து விட்டனர். அதற்கான காரணங்களை அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. என்றாலும், நம்மைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் அமைப்பு மேலும் நீடித்து இருப்பதற்கு ஒரே காரணந்தான்

இருக்கமுடியும். அதாவது, அதிகாரம் கைமாறிய நேரத்தில் அனுபவமும் ஆற்றலும் மிக்க தலைவர்கள், அல்லது அத்தகைய தலைவர்களைக் கொண்ட கட்சியினர் சிறிது காலம் ஆட்சி புரியவேண்டும் என்பதே யாகும்.

மேற்சொன்ன காரணத்திற்காக காங்கிரஸ் இனியும் இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வருவதாயின், அந்த முடிவு நாட்டிலுள்ள பிற முற்போக்குக் கட்சியினராலும் வரவேற்கப்பட வழி செய்யவேண்டும். இல்லையேல், நாட்டில் கட்சிகளுக்குள் போட்டியும், பொய்ப் பிரசாரமும் மலிந்து மக்களின் அன்றாட வாழ்வைப் பாதிக்கும் அளவுக்கு அமைதி குலைந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

'ஒரே கட்சி' 'ஒரே தலைவர்' 'ஒரேகொடி' என்ற கோஷங்கள் அல்லது கொள்கைகள், அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட காலத்திற்குத்தான் பொருந்தும். இது, அரசுரிமை பெற்று ஆக்க வேலைத் திட்டங்களைத் தயாரித்து மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தீர்ப்பளிக்கும் காலம். இப்போது 'ஒரே கட்சி' மனப்பான்மை உதவாது. கடந்தகால செல்வாக்கைக் கொண்டோ, கட்டுப்பாட்டின் பெயரால் கட்சியினரைப் பயமுறுத்தியோ ஒரே கட்சி மனப்பான்மையை வளர்ப்பது பாசிஸமே யொழிய ஜனநாயகமல்ல. அந்தப் பாசிஸ முறையை காங்கிரஸ் கடைப்பிடிக்காது என்பதில் நமக்கு நம்பிக்கையுண்டு. ஏனெனில், துன்பமொன்றே அதன் எதிர்நின்ற காலத்திலும், தியாகத் தீயில் அதன் தொண்டர்கள்

துள்ளிக்குதித்த நேரத்திலுங்கூட, அது ஜனநாயகப் பாதையைவிட்டு விலகியதில்லை. இது, அதன் கடந்த கால வரலாறு.

இனி, வருங்காலத்திலும் காங்கிரஸ் ஜன நாயகப் பாதையில் செல்லுமென்றே நம்புகிறோம். பணமூட்டைகளில், சாதிப் பித்தர்களில், மதவெறியர்களில் ஒரு சிலர் அந்தப் புனித ஸ்தாபனத்தில்—அதன் வீரர்குழுவில்—மறைந்து வாழ்வதை நாம் மறக்கவில்லை. என்றாலும், காங்கிரஸிலுள்ள தியாகத்திற்கு அஞ்சாத தீரத்தொண்டர்கள் இந்தப் பிற்போக்கு சக்திகளை ஸ்தாபனத்திலிருந்து விரட்டியடிக்க வேலை செய்து வருகின்றனர் என்பதை நாம் நன்கறிவோம். அவர்கள் வெற்றிபெறுவார்கள் என்பதிலும் நமக்குத் தளராத நம்பிக்கையுண்டு.

காங்கிரஸ் தேசீய ஸ்தாபனமாக அல்லாமல் ஒரு பார்லிமெண்டரிக் கட்சியாக இருந்து வருவதை ஜன நாயக புத்தியுள்ள எவரும் ஆட்சேபிக்க முடியாது.

காங்கிரஸ், சட்டரீதியில் செல்லும் பார்லிமெண்டரி கட்சியாக வேலை செய்வதானாலுங்கூட, அதன் அமைப்பில் பெருத்த அளவுக்கு மாறுதல் செய்யப்படவேண்டும். குறிப்பாக, எடுத்ததற்கெல்லாம் தலைமையினர் உத்திரவு அனுப்புவதென்ற வழக்கமும், சிறிய காரியங்களுக்குக்கூட 'பெரிய' இடத்துத் தயவுக்குக் கையேந்துவதென்ற மாகாணத் தலைவர்களின் மனப்பான்மையும் அடியோடு தொலையவேண்டும். இந்த வழக்கத்தால்தான் மாகாணத்தில் கட்

சிக்குள்ளேயே பூசலும் பொருமையும் போராட்டமும் அதிகரிக்கின்றன. மாகாணத் தலைமையினர் மேலிடத்து உத்திரவு தங்களது ஆதிக்கபுத்திக்கு ஆதரவாயில்லாவிடின் அதை எதிர்க்க மாகாண உணர்ச்சியைக் கிளப்புகின்றனர். அதே தலைவர்கள் தங்களுக்கு வேண்டியபோது மட்டும் அற்ப விஷயங்களுக்குக்கூட மேலிடத்தாரிடம் யோசனை கேட்கத் தாமே வலியச் செல்கின்றனர். அதை எதிர்த்துக் கேட்டால் 'தேசீயம்' பேசுகின்றனர். சான்ருக, சென்னை காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவர் தேர்தலில் மேலிடத்தார் தலையிட்டபோது மாகாண உணர்ச்சி கொண்டு அதை எதிர்த்து வீழ்த்திய அதே தலைவர்கள், அரசாங்க பீடத்திலேறியதும் அமைச்சர்களுக்குப் பார்லிமெண்டரி காரியதரிசிகள் நியமிப்பதில் மேலிடத்து யோசனையைக் கேட்க ஓடினர்; அவர்கள், 'வேண்டாம்' என்று சொன்னதாகக் கூறி காரியதரிசிகள் நியமனத்தைக் கைவிட்டனர். இதைத் தமிழகம் நன்கறியும். காங்கிரஸ் மாகாணங்களில் பார்லிமெண்டரி காரியதரிசிகள் இல்லாதது சென்னை மாகாணம் ஒன்றுதான். அந்தப் பதவிகள் இருக்க வேண்டுமென்ற கருத்து நமக்குக் கிடையாது. என்ருலும், அதை ஒழிப்பதற்குக் கையாளப்பட்ட முறை தன்மானமற்றது என்பதுதான் நம்முடைய குற்றச்சாட்டு. மேலிடத்தார் தலையிட்டால் மாகாணத்தில் கட்சிப் பூசல் வளுக்கின்றதே யொழிய குறையவில்லை.

மேலிடத்துத் தலையீடு பெரும்பாலான சமயங்களில் மாகாண மக்களின் கருத்துக்கு மாருகவே

இருப்பதுடன் மாகாணத்தின் செல்வ நிலைமையையும் சீரழித்து விடுகின்றது. ஜமீன்-இனும் ஒழிப்பு மசோதாவில் மேலிடத்துத் தலையிட்டால் நஷ்ட ஈட்டுத் தொகை இரட்டிப்பாக உயர்ந்ததை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். இவைமட்டுமல்ல; இன்னும் எவ்வளவோ சான்றுகள் கூற முடியும். சென்றதை மறப்போம். வருங்காலத்திலேனும் இந்தச் சீர்கெட்ட வழியிலிருந்து மீண்டு, தமிழகம் சிறப்படைய கோவை மாநாடு வழி காட்டட்டும்.

தமிழரசுக் கழகத்தாரைப் பொறுத்தவரையில், வேங்கடத்துக்கு வெளியேயிருந்து உத்திரவு பெறும் கட்சிகளாலோ, அல்லது வேங்கடத்துக்கு வெளியே தாயகத்தின் எல்லை இருப்பதாக — தமிழினத்தின் இரத்தம் பாய்வதாக—தமிழ் இனத்தின் பண்பாடு பரவியிருப்பதாக நம்புகிறவர்களாலோ தமிழகம் சீரடையாது என்பது நமது திடமான நம்பிக்கை. என்றாலும், தமிழ்நாடு காங்கிரஸ் தமிழினத்தின் உரிமைக்கும் பெருமைக்கும் தீங்கற்றவகையில் அகில இந்திய காங்கிரஸோடு இணைந்திருக்க விரும்பினால் அதற்குக் குறுக்கே இருக்க நாம் விரும்பவில்லை. அதன் விளைவுகளைப் பொறுத்திருந்து பார்ப்போம். அதனால் தீமையுண்டாவதாயின் அதைத் தடுக்க, தமிழரசுக் கழகம் தளராது பாடுபடும். ஆனால், தமிழினத்துக்குக் கேடுவராத வகையில் காங்கிரஸ் வேலை செய்ய வேண்டுமானால், அதன் அமைப்பில் உடனடியாக மாற்றம் காணவேண்டும். கவர்னர் தேர்தலுக்கு அபேட்சகரை நிறுத்துவது உள்பட, மாகாண எல்-

லக்குட்பட்ட எல்லா பார்லிமென்டரி வேலைகளையும் மேலிடத்தின் அனுமதியைக் கோராது மாகாணக் கமிட்டியே செய்துகொள்ள உரிமை இருக்கவேண்டும். மேலிடத்துத் தலையீடென்பது வேங்கடத்திற்குத் தெற்கே தலைகாட்டக்கூடாது. மாகாண நிர்வாகத்தில் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு காரணமாக எவருக்கேனும் தீங்கு செய்யப்படின், அதைப்பற்றி விசாரித்துத் தீர்ப்புக்கூற கட்சிப் பற்றற்றவர் அடங்கிய நீதிமன்றம் ஒன்றை மேலிடத்தார் அமைத்துக் கொடுக்கலாம். இதைத் தவிர, மாகாணக் கமிட்டிக்கும் மத்தியக் கமிட்டிக்கும் உள்ள தொடர்பு வெறும் சம்பிரதாய அளவுக்கு இருக்கவேண்டுமே ஒழிய, சட்ட பூர்வமாகப் பிணைக்கப்படக்கூடாது. இங்கிலாந்து போன்ற நாடுகளிலுள்ள அரசியல் கட்சிகளின் விதிகளைக் காட்டி நமது திட்டத்தைக் குறைகூறலாம். இந்தியரனைவரும் பிரிட்டிஷாரைப் போன்று மொழி, பண்பாடு, மனப்பாங்கு ஆகியவற்றில் ஒரே இனத்தவரன்று. ஆகவே நாம் சொன்ன வகையில், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியை ஒரு பூரண சுதந்திரமுள்ள அமைப்பாக மாற்ற கோவை மாநாட்டினர் முயற்சி செய்யவேண்டும்.

(3)

தமிழ் நாடு காங்கிரஸ், மேலிடத்திலிந்து சுதந்திரம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. காங்கிரஸ் இன்றுள்ள நிலையில், அதன் கடந்த காலவேலைத் திட்டங்களில் பல காலாவதியாகிவிட்டன. சான்ருக, மதுவிலக்கு, ஆலயப் பிரவேசம் ஆகியவை அமுலுக்கு வந்துவிட்டன. மற்றும் அடிப்

படைக் கல்வி, குடிசைத் தொழில் வளர்ச்சி, கதர் அபிவிருத்தி போன்ற நிர்மாணத் திட்டங்களும் அரசாங்கத் திட்டங்களாகிவிட்டன. இனி, காங்கிரஸ் உயிர் வாழவேண்டுமானால் அதற்குப் புதிய திட்டங்கள் தேவை. அத்தகைய திட்டங்களை வகுப்பு உணர்ச்சியால் பாதிக்கப்பட்டு பண முட்டைகளின் முற்றுகைக்குள் சிக்கிச் சிறைபட்டுள்ள மேலிடத்தாரிடமிருந்து எதிர்பார்க்கக் கூடாது. மேலும், அங்கிருந்து கிடைக்கும் திட்டம் தமிழ் இனத்திற்கு, தமிழர் பண்பாட்டிற்குப் பொருந்தியதாகவும் இருக்க முடியாது. இது நமது கடந்தகால அனுபவம்.

எனவே, கோவை மாநாட்டினர் தமிழ் வழிப்பட்ட—தமிழ் இனத்திற்கு வாழ்வளிக்கக்கூடிய—வேலைத் திட்டங்களைத் தாமே உருவாக்குவார்களென நம்புகிறோம்.

அத்தகைய வேலைத் திட்டம் எதுவாயிருக்க முடியும்? ஏகாதிபத்தியம் வெளியேறிய அதே கணத்தில் நடந்திருக்கவேண்டிய, ஆனால், மேலிடத்தார் நடத்த மனமின்றி, மறுக்கவும் மார்க்கமின்றி காலங்கடத்திவரும் தமிழகப் பிரிவினை, சுய நிர்ணய வழி தமிழ்க் குடியரசு அமைத்தல் ஆகிய வேலைத் திட்டங்களேயாகும்.

சில காங்கிரஸ்காரர்கள் நம்புவதைப் போன்று தமிழகப் பிரிவினை அவ்வளவு எளிதில் ஏற்பட்டு விடுமென நம்மால் நம்பமுடியவில்லை. காரணமென்ன? 'ஒரு மாகாணத்தை உருவாக்குங்கால் இன்னொரு

மாகாணம் கஷ்டத்திற்கு உள்ளாகும்படி விட்டு விடக்கூடாது" என்று இந்தியப் பார்லிமெண்டில் பண்டித நேரு கூறியிருக்கிறார். மொழிவழி மாகாணப் பிரிவினையை இந்தியாவில் அமுல் நடத்தினால், கஷ்டப்படும் மாகாணங்களில் முதல்தரமானது இந்தியாவின் குபேரர்களைக் கொண்ட குஜராத் மாகாணமேயாகும். இன்றைய பம்பாய் மாகாணத்தில், கன்னட நாட்டின் பகுதியும், பூனா, பம்பாய் நகரம் போன்ற மராட்டிய நாட்டின் பகுதிகளும் சேர்ந்திருக்கின்றன. எனவே, மொழிவழி மாகாணப் பிரிவினைப்படி பம்பாயின் தலை நகரமும், மற்றொரு சிறந்த நகரமாகிய பூனாவும் மராட்டிய நாட்டோடு சேரும். வடகன்னடம் சென்னை மாகாணத்திலுள்ள தென்கன்னடத்தோடு இணைக்கப்படும். எஞ்சியுள்ள குஜராத்தில் சிறு சிறு சமஸ்தானங்கள் ஒன்றை ஒன்று ஒட்டினாற்போல் நிறைய இருக்கின்றன. அவையனைத்தையும் ஒன்றாக்கி 'ராஜஸ்தான்' அமைக்கவேண்டுமென அதன் மன்னர்கள் கோருகின்றனர். பம்பாய் பிரதமர் திரு. பி. ஜி. கேர் போன்ற செல்வாக்குள்ள தலைவர்களும் அதை ஆதரிக்கின்றனர். இவை அனைத்தையும் அமுல் நடத்திய பிறகு எஞ்சியுள்ள குஜராத் பிரதேசம் மிகச் சிறியதாகவே யிருக்கும். இந்த நிலையை கூர்ஜரத் தலைவர்கள் விரும்பவில்லை. ஆகவே தங்கள் மூளை பலமும் மூலதன பலமும் கொண்டு மொழிவழி மாகாணப் பிரிவினைக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். பலமாகக் கிளர்ச்சி செய்யத் திட்டமிட வேண்டும். மற்றும், சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திராவை மட்டும் தனி நாடாக்கி விட்டு, கன்னடத்தை

யும் கேரளத்தையும் காலங் குறிப்பிடாது தமிழ் நாட்டோடு சேர்த்து வைப்பதென்று மத்திய அரசாங்கத்தில் ஒரு திட்டம் உருவாகி வருவதாக அறிகிறோம்.

ஆந்திரரின் அவசரத்தையும், ஆத்திரத்தையும் காரணமாகக் காட்டி அவர்களுக்குமட்டும் தனிநாடு தந்து மற்றபடி மொழிவழி மாகாணப் பிரிவினையைப் பின்னே தள்ளிப்போட முயல்கின்றனர். இதற்குத் தமிழ் நாட்டு காங்கிரஸ்வாதிகள் இணங்குவார்களானால், இனி, தமிழகம் தனிநாடாவதோ, வடநாட்டின் பிடியிலிருந்து விடுபடுவதோ, இந்தத் தலைமுறையில் இல்லை.

எனவே, கோவை காங்கிரஸ் மாநாட்டினர் மொழிவழி மாகாணப் பிரிவினை எளிதில் கிடைத்து விடும் என்று எண்ணி தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது.

தமிழ் நாடு தனி நாடாகும் அதே நேரத்தில், சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசு அமைத்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமை தமிழினத்துக்கு இருக்கவேண்டுமென்று கோவை மாநாட்டினர் வற்புறுத்த வேண்டும். இந்தியாவின் பூகோள அமைப்பு காரணமாக மத்தியில் ஒரே அரசாங்கம் அமைய வேண்டுமென்பதே காங்கிரஸின் கொள்கை. இதற்குத்தான் காங்கிரஸ்வாதிகள் கட்டுப்பட்டிருக்கின்றனர். இதை எப்படி அமைப்பதென்ற விஷயத்தில் அபிப்பிராயம் கூற மாகாண காங்கிரசுக்கு உரிமை

உண்டு. அந்நிய நாட்டு அரசியல் உறவு, இந்தியாவின் பாதுகாப்பு, போக்குவரத்து ஆகிய இனங்களை மட்டும் மாகாணங்கள் இஷ்டத்தின்பேரில் விட்டுக் கொடுத்து இந்திய சமஷ்டியை அமைப்பதே நியாயமான முறை. அந்த சமஷ்டியும் சோஷலிச இந்தியாவில்தான் அமைய முடியும். ஆனால், இன்று நடப்பதென்ன? பலம் வாய்ந்த மத்திய சர்க்கார் என்ற பெயரால் மாகாணங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. "தமிழ் நாடு ஒரு தனி நாடு, தமிழர் ஒரு தனி தேசீய இனம்" என்ற வரலாற்று உண்மைகளைக் கூட அரசியல் நிர்ணய மன்றத்தார் மறந்து விட்டனர். அதில் கலந்துகொண்ட தமிழகத்துப் பிரதிநிதிகள்கூட வற்புறுத்தவில்லை. தமிழினத்துக்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதிகளைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி தமிழகப் பிரிவினையை வற்புறுத்துவதோடு, சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசை அமைத்துக்கொள்ள தமிழினத்துக்கு உரிமை உண்டென்று பிரகடனம் செய்ய வேண்டும். இது காங்கிரசின் அடிப்படைக் கொள்கைக்கு முரண்பட்டதல்ல. காங்கிரஸ் வேண்டுவது ஏதேனும் ஒருவகையில் ஐக்கிய இந்தியா. அதை நாம் ஏற்போம். அதே சமயத்தில் பிரஜா உரிமை, கைத்தொழில், வர்த்தகம், சுங்கம் இவை போன்ற தமிழ் நாட்டின் உயிர் நாடியான உரிமைகளை விட்டுக்கொடுக்கமுடியாதெனமறுப்போம். இதுதான் தேசபக்தி மார்க்கம். இதற்கு மாறுபட்ட ஏகாதிபத்திய — முதலாளித்துவ — பாசிஸப் பாதைகளில் அடியெடுத்து வைக்க முடியாதென்று அழுத்தந் திருத்தமாகத் தீர்மானிக்கும்படி கோவை மாநாட்டினரைக் கோருகிறோம்.

சமரசம் காணட்டும்!

என். ஜி. ஓக்கள் என்றால், வேலை நிறுத்தப் புரட்சியை அவர்களோடு சேர்த்துச் சிந்திக்க இதற்கு முன்பெல்லாம் எவரும் துணிந்திருக்க முடியாது. சமூகத்தில் மத்தியதர வகுப்பினரான இவர்கள், மேல் வகுப்புக்குத் தாவுவதற்காகவே ஒவ்வொரு கணமும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி நிற்பவர்களாவர். அத்தகையோர் அரசாங்கத்தின் அதட்டல், உருட்டல்களுக்கு அஞ்சாது வேலை நிறுத்தத்தில் இறங்கி இருப்பது எளிதான செயலல்ல. அவர்களது வேலை நிறுத்தத்தை அரசாங்கம் நேர்வழியில் சென்று முயன்றிருந்தால் தடுத்திருக்க முடியும் என்பதே நமது கருத்து.

கடந்த பல மாதங்களாகவே அவர்கள் கிளர்ச்சி செய்து வந்திருக்கின்றனர். அந்தக் கிளர்ச்சியை நசுக்க சர்க்கார் ஆரம்பத்தில் கையாண்ட அடக்கு முறைகளை அறிவுள்ள எவரும் ஆமோதிக்க முடியாது. "அவர்கள் சங்கம் வைத்ததே தவறு. வேலை நிறுத்தம் செய்வதாக அறிக்கை அனுப்பியது அதைவிடப் பெரிய தவறு. ஒரு மணி அடையாள வேலை நிறுத்தம் செய்தது மன்னிக்கமுடியாத குற்றம்" என்றெல்லாம் எசமான தோரணையில் பேசிவந்த அரசாங்கம், இன்று வேலை நிறுத்தம் துவங்கி இருக்கும் விநாடியில் என். ஜி. ஓக்களின் நல்லெண்ணத்துக்கு மனுப் போடுகிறது; தேசபக்தியை உபதேசம் செய்கிறது. அத்தனைக்கும் மேலாக, 'அமைச்சர் குழுவைக் கவிழ்க்க ஒரு சில வகுப்பு வாதச் சுயநல வாதிகள் செய்யும் சூழ்ச்சி' என்று அரசாங்கத்தைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கும் வட்டாரத்தில் பிரசாரம் செய்யப்படுகிறது. முற்போக்கு இயக்கங்களை

நசுக்குவதற்கு இதைவிடக் கேவலமான பிரசாரத்தை யாரும் செய்துவிட முடியாது இதை நாடு அனுமதித்தால், இனி சமூகத்தின் அடிதளத்திலுள்ள மக்கள் தங்கள் வாழ்க்கைக்காகப் போராடி வெற்றிபெறுவதென்பது என்றென்றும் முடியாத காரியமாகிவிடும். என். ஜி. ஓ.க்களின் கிளர்ச்சி பிரகாசம் அமைச்சர் குழு இருந்த காலத்திலேயே தொடங்கி விட்டதென்பதை மறந்துவிடக்கூடாது. மிகப் பெரிய ஊர்வலங்களையும் பொதுக் கூட்டங்களையும் நடத்தி பிரகாசத்தைக்கூட திணறவைத்திருக்கின்றனர் என்பதை இந்த அரசாங்க பக்தர்களுக்கு நினைப்பூட்டுகிறோம். அரசாங்கத்தைக் கவிழ்க்கும் வேலையை நடத்துவோர் என். ஜி. ஓ.க்களோ, வேறு எந்த முற்போக்கு வாய்ந்த போராட்ட வாதிகளோ அல்ல. அத்தகைய சதி செய்வோரை அசெம்பிளியில் ஆராய்ந்து, அமைச்சர் குழுவில் அலசிப் பார்த்துக் கண்டுபிடிக்கட்டும். அதைவிட்டு என். ஜி. ஓ.க்களின் மீது வீண்பழி சுமத்துவது அறிவுடைமையல்ல.

அமைச்சர் குழுவினர் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். சுயநலத்துக்காகத் தங்களுக்குத் தூபம் போடுவோர் வலையில் சிக்கிவிடக் கூடாது. என். ஜி. ஓ.க்களின் குழுவில் பல சாதியினர், பல சமயத்தினர், பல மொழியினர் அடங்கியிருக்கின்றனர். எனவே, ஒன்றிரு தலைவர்களை வைத்துக் கொண்டு அதற்குத் தப்பெண்ணம் கற்பிக்க முயல்வது சிக்கலைத் தீர்ப்பதற்குப் பதில், அதிகப்படுத்துவதாகவே முடியும்.

என். ஜி. ஓ.க்கள் படித்த குழுவினர். வாழ்க்கையைப் போராட்டப் பாதையில் கொண்டுசெல்ல முடியாதவர் எனப் பெயரெடுத்தவர்கள். எனவே, தங்கள் பிடிவாதத்தால் அவர்

களைப் போராட்டப் பாதைக்கு விரட்டியடித்து அதன்மூலம் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் அமைதியின்மையை உண்டாக்கிவிடாமல், அவர்களிடம் நேர்மையான முறையில் சமரசம் செய்துகொள்ளுமாறு அரசாங்கத்தைக் கோருகிறோம். விரைவில் சமரசம் உண்டாகி என். ஜி. ஓ.க்கள் வெற்றி பெறுவார்களாக!

ராஜாஜீ வாழ்க!

ராஜாஜியின் எழுபதாவது பிறந்த நாள் விழாவைத் தமிழ்நாடெங்கும் கொண்டாடுகின்றனர். நாட்டின் விடுதலைப்போரில் ஈடுபட்டுச் சொல்லொணா இன்னல்களுக்காளான பெரியார்களில் ராஜாஜியும் ஒருவர். அத்தகையவர் பிறந்தநாளைத் தமிழகம் கொண்டாடுவது வரவேற்கத்தக்கது.

ராஜாஜிக்குக் கொள்கை உண்டு. திட்டமுண்டு. திட்டத்தை அமுல் நடத்தும் திறமையுமுண்டு. ராஜாஜி தேசியத்தின் ஆழத்தை நன்கறிந்தவர். என்றாலும், அவர் மாகாண உணர்ச்சியை மறந்தவரல்ல. "தமிழகத்தின் ஒரு ஜில்லா அளவுக்குக்கூட இல்லாத அயர்லாந்து தனியரசு நடத்தும்போது தமிழகம் தனியரசு நடத்த விரும்புவது குற்றமல்ல" என்று அன்றொருநாள் கோகலேஹாலில் கூறினார். இடைக்கால சர்க்காரில் பதவி ஏற்கச் செல்லுமுன் அவர் வானொலியில் பேசுகையில், "நான் வனவாசம் போகிறேன், தமிழர்களே ஒன்றுபடுங்கள்" என்று கூறினார். ஆம், வேங்கடத்துக்கு வெளியே செல்வது வனவாசம் செய்வதற்கு ஒப்பாக இருந்தது ராஜாஜிக்கு. மத்திய அரசின் அமைச்சர் பதவிகூட அவரது மாகாணப் பற்றை மறக்கச் செய்யவில்லை.

அவர் பொருளாதாரத் துறையில் புரட்சிக்காரரல்ல. என்றாலும் பணமூட்டைகளின் பார்வையில் அவர் பகைவராகவே காணப்பட்டார். அவர் தலைமை அமைச்சராயிருந்த காலத்தில் ஏழை விவசாயிகளின் கடனைக் குறைத்ததும், மதுரை ஹார்வி மில் கதவடைப்பைத் தவிர்க்குமாறு ஆங்கிலேய முதலாளிக்கு ஆணையிட்டதுமே இதற்குச் சான்றுகளாகும். ஆரம்பத்தில், இடைக்கால மத்திய சர்க்காரில் அவருக்கு இடம் தந்தபோது நிதி இலாகா கொடுப்பதாக இருந்து, பின்னர் வடநாட்டு முதலாளிகளின் பலமான எதிர்ப்பால் அது தடைபட்டது. 'மூலதனக்காரர்களின் கொள்ளையில் வரி என்னும் வெடிகுண்டை எறிவாரோ?' என்ற அச்சந்தான் முதலாளிகளின் முட்டுக்கட்டைக்குக் காரணமாகும். ராஜாஜியின் கொள்கையில் வேற்றுமை காண்பார் உண்டு. அதற்கு நியாயமும் இருக்கலாம். ஆனால், தன்னலமின்றி ஒழுக்க உள்ளத்துடன் எடுத்த காரியத்தைத் திறம்பட முடிப்பதில் அவர் வல்லமை வாய்ந்தவர். காங்கிரசில் அவருக்குக் கடுமையான எதிர்ப்பு தோன்றிய போதும் அவர் சோர்வடையவில்லை. அன்று பழித்தவர்களும் இன்று பாராட்டும் நிலை எய்தியதற்குக் காரணம் அவரது சலியா உழைப்பேயாகும். தமிழகத்திற்கு வெளியே தமிழ்நாட்டின் பெயருக்கு உயர்வளிக்கும் ராஜாஜி நீடூழி வாழ்க!

அறிவிப்பு

15-1-48 'முரசு' இதழ் தமிழர் (பொங்கல்) திருநாள் மலராக வெளிவரும். அதிகப் பக்கங்களுடன், அழகிய முறையில், சிறந்த கட்டுரைகளுடன் வெளிவருகிறது. தமிழர் திருநாளுக்கு முன்னதாக வாசகர்களுக்குக் கிடைக்கும்படி வெளிவரும். தேவையான பிரதிக்கு ஏஜண்டுகள் முன்னதாகவே பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்.

விலை அணு 6

—நிர்வாகி

ஈரோடு தமிழரசுக் கிளைக் கழகத்தாரால் அலங்கரிக்கப்பட்ட கப்பலில் வ. உ. சி. யின் படம் ஊர்வலம் வந்தபோது எடுத்த படம்.

இந்த உலகில்

மு. வரதராசன்

அந்தப் பூங்காவில் அந்தச் செடிகளையும் கண்டு, அவற்றை அடுத்து மிக உயரமாக வளர்ந்திருந்த மரங்களையும் கண்டேன். சிறு செடிகளை வழிகளின் ஓரத்தில் வளர்க்கின்றார்கள். வேலிபோல இருந்து அழகும் செய்து உய்யானத்தைச் சிறப்பிக்கவேண்டும் என்று எண்ணுகின்றார்கள். என்னைப்போன்ற ஏழைப் பெண்களின் நிலைமையும் அப்படிப்பட்டதே. உயர்ந்தவர்கள் எங்களைத் தேடுகின்றார்கள். ஆனால், குடும்பத்தில் முக்கியமான இடம் எங்களுக்கு இல்லை. நாங்கள் பெரிய வீடுகளில்தான் இருக்கிறோம். நாங்கள் இல்லையானால் பெரிய வீடுகள் இருக்கவும் முடியாது. அந்த வீடுகளுக்குப் பெருமையும் இருக்க முடியாது. ஆனால் எங்களால் வளர்ந்து வாழும் உயர்ந்தவர்கள் மிக மிகக் கவலையோடு எங்களைக் கத்திரிக்கின்றார்கள். அடிக்கடி கத்திரித்துக்கொண்டே இருக்கின்றார்கள். நாங்களும் உயர்ந்த குடும்பத்தில் நல்ல மதிப்புப் பெறாதபடி எங்களைத் தாழ்த்தி அடக்கிக்கொண்டே இருக்கின்றார்கள். பாவம்! அந்தச் சிறு செடிகளை அழகாக, ஒழுங்காக, திறமையாகக் கத்தரித்து என்றும் ஓரே நிலையாக வைத்திருக்கின்றார்கள். ஆனால், ஒரு சில மரங்களை மட்டும் வானளாவ உயர்ந்து வாழ விடுகின்றார்கள். ஆயிரக்கணக்கான ரூபாய், மிகப் பல நகைகள், ஆடம்பரமான செலவுகள் எல்லாம் சமூகத்தில் சிலருக்கே. இந்த உயர்ந்த மரங்கள் இப்படித்தான் வாழ்கின்றன. ஆனால் இவைகளைக் காப்பதற்காக, இளஞ் செடிகளை எப்போதும் கத்தரித்துக் கொண்டே இருக்கவேண்டுமா? ஒன்று உயர்ந்து வாழ, ஒன்று தாழ்ந்து தலைகொடுக்க வேண்டுமோ?

*　　*　　*

அந்த உயர்ந்தோங்கிய மரங்களுக்கு நல்ல வாழ்வு அமைந்திருக்கின்றது. தடையின்றித் தலை நிமிர்ந்து செருக்கோடு வளரவிட்டிருக்கிறார்கள். ஆனால், அந்த ஏழைச் செடிகள் ஒன்றிரண்டு தளிரை மேலே விட்டுத் தலைதூக்கவும் விடுவதில்லை. உடனே கத்தரித்து மட்டந்தட்டி விடுகின்றார்கள். அழகும், கவர்ச்சியும், காவலும் அந்த ஏழைச் செடிகளால். ஆனால், வளமும், வாழ்வும், உயர்வும் அந்த நீண்ட மரங்களுக்கே. பெருங்காற்று அடித்து அலைக்கும் போதுதான் நியாயம் பிறக்கின்றது. நீண்ட மரங்கள் இப்படி வேரோடு கிளம்பி விழுந்து விடும்போதுதான் புரட்சியின் பயன் தெரியும். என்னைப்போன்ற ஏழைப் பெண்கள் எத்தனைபேர் தலைதூக்கமுடியாமல் வாடுகின்றார்கள்! தாங்கள் வாடினாலும் தங்கள் உழைப்பின் பயனை எல்லாம் சில செல்வக் குடும்பங்களுக்கு உரிமையாக்கி உயர்த்திவிடுகின்றார்கள். அவர்களுக்கெல்லாம் நல்ல வாழ்வு தர ஒரு பெருங்காற்று வீசாதோ?

*　　*　　*

என் கைகள் முரட்டுக் கைகளாம்! வேலைக்காரியின் கைகளாம்! இந்த உண்மை அவருக்கு முன்னமே தெரியாதா? இந்தக் கைகள் முரட்டுக் கைகள்தான். உழைப்பாளியின் வயிற்றில் பிறந்த கைகள்; உழைப்பாளியாக வளர்ந்த கைகள். ஊரை ஏமாற்றும் கைகளல்ல; மற்றவர் உழைப்பில் உண்டு களித்திருக்கும் கைகளல்ல; ஒழுக்கத்தை மறக்கும் கைகளல்ல; பணத்துக்காக உடம்பை விற்கும் ஒழுக்கங்கெட்ட கைகள் அல்ல. மானத்தை மறந்து, காமத்தையும், அதனால் வரும் காசையும் விரும்பும்

கைகளல்ல. ஒழுக்கமும் மானமும் கெட்ட வாழ்வைச் செல்வத்தாலும் செல்வாக்காலும், பட்டாலும், பொன்னாலும் மூடி மறைத்து வளர்ந்த கைகளல்ல. என் தாயும் வேலைக்காரி; என் தந்தையும் வேலைக்காரன். உற்றார் எல்லாரும் உழைப்பாளிகள்; உழைப்பின் பயனைக் கொள்ளையடிப்பவர்களல்ல. அவர்களும் உழைத்து வளர்ந்த முரடர்கள்; அவர்கள் வயிற்றில் பிறந்து வளர்ந்த என் கைகளும் முரட்டுக் கைகள்தான். இந்த மூன்று ஆண்டுகள் சோம்பேறி வாழ்வு வாழ்ந்தேன்; மற்றவர்கள் மதிப்பைப் பெற்றேன். இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து சோம்பேறியாய் வாழ்ந்தால், என் கைகளும் பூங் கைகளாக மாறும்; மென்மை பெற்றுவிடும். அந்தச் சோம்பேறியின் கைகள் வேண்டுமா ?

* * *

நான் ஓர் ஏழைப்பெண் தொழிலாளியாக இருந்திருந்தால், அங்கங்கே உள்ள தொழிலாளிகளும் ஏய்த்திருப்பார்கள்; முதலாளிகளும் ஏய்த்திருப்பார்கள். இப்போது உழைப்பு இல்லாமலே செல்வம் சேர்த்து உயர்ந்த வாழ்க்கை நடத்துகின்றேன். அப்போது நாள் முழுதும் உழைத்தும், அரைவயிற்றுக் கஞ்சிக்கும் மானத்தை மறைக்கும் துணிக்கும் கவலைப்பட்டிருப்பேன். இப்போது போக்கிலிகளும், முரடர்களும் எட்ட முடியாத எல்லையில் வாழ்கின்றேன். அப்போது அந்தப் போக்கிலிகளுக்கும் முரடர்களுக்கும் இடையிலேயே வாழ்க்கையை நடத்தவேண்டியிருந்திருக்கும். இப்போது என்றோ ஒருநாள் போராட வேண்டியிருக்கிறது. அப்போது நாள்தோறும் நாழிகை தோறும் போராட நேர்ந்திருக்கும். இப்போது எவனோ

ஒருவனுடைய மனத்தோடு அல்லது, அவனுடைய வாயோடு என் மனமும் வாயும் போராட நேர்கின்றது. அப்போது என்னை எளிதில் பிடித்து இழுத்த வம்பர்களுடைய முரட்டுக் கைகால்களோடு என்னுடைய மெல்லிய கைகால்கள் போராட நேர்ந்திருக்கும். இப்போது போலீஸ்காரர்கள் முதல் பொல்லாத தடியர்கள் வரையில் எல்லாரும் எனக்கு வேண்டியபோது உதவி செய்யக் காத்திருக்கின்றார்கள். அப்போது அவர்களே என்னை வம்புக்கும் தும்புக்கும் ஆளாக்கியிருப்பார்கள். இப்போது சுற்றும்புறமும் உலகம் எனக்கு அஞ்சுகின்றது; நான் சொன்னபடி ஆடுகின்றது. அப்போது நான் இந்த உலகத்திற்கு அஞ்சி வாழ்ந்திருப்பேன்; உலகம் என்னை நினைத்தபடி ஆட்டி வைத்திருக்கும். இப்போது மற்றவர்கள் உழைத்து எனக்குப்பெருமை கொடுக்கின்றார்கள். அப்போது நான் மற்றவர்களுக்கு உழைத்து உழைத்துச் சிறுமைப்பட்டிருப்பேன்.

* * *

அங்கிருந்து புறப்பட்டுக் கடற்கரைக்குச் சென்றோம். செல்லும்போது, தேமொழி (குழந்தையின் பெயர்) விடாப்பிடியாய் என் கையிலிருந்த இரண்டு ஆரஞ்சுப்பழங்களையும் கொடுக்கும்படி கேட்டாள். கேட்டபடி கொடுத்தோம். அப்போது அங்கே செட்டியார் குடிசையருகே நின்று கொண்டிருந்த ஓர் ஏழைத்தாயின் கையிலிருந்த குழந்தை அந்த ஆரஞ்சுப்பழங்களைக் காட்டிக் காட்டித் தன் தாயை தொந்திரவு செய்தது. இரண்டு பழங்களில் ஒன்றை அதன் கையில் கொடுக்கலாம் என்று ஆனவரையில் முயன்றேன். தேமொழி கொடுக்க மறுத்துப் பிடிவாதம் செய்

தாள். அந்தக் குழந்தை அழுது அழுது ஏழைத்தாயைத் துன்பப்படுத்தியது. வேறு வழியின்றி நாங்கள் கடற் கரைக்குச் சென்று சேர்ந்தோம்.

இப்படிப்பட்ட வறுமை இந்த உலகத்தில் இருக்கக் கூடாது என்று வருந்தினேன். ஒரு தாய் தன் குழந்தைக்கு வேண்டியதெல்லாம் வாங்கித்தந்து வளர்க்கின்றாள். மற்றொரு தாய் தன் குழந்தைக்கு வயிறாரக் கூழ் வார்க்கவும் வழியில்லை. இந்தக் குழந்தை அந்தக் குழந்தையைப் பார்த்து ஏங்குவதா? இரண்டு ஆரஞ்சுப் பழங்கள் ஒரு குழந்தையின் கையில் விளையாட்டுப் பொருள்களாக இருப்பது! ஆனால், மற்றொரு குழந்தையின் ஒட்டிய வயிறுக்கும், ஊறும் வாய்க்கும், ஏங்கும் கைக்கும் அந்தப் பழத்தில் ஒரு துணுக்கும் கிடைப்பதில்லை! இந்த உலகம் இப்படி இருக்கக்கூடாது. எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். இல்லையானால், எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே வகையான சில பொருள்களே கிடைக்கவேண்டும். அதுவும் முடியாதென்றால், எல்லாக் குழந்தைகளும் எதுவும் கிடைக்காமல் ஏங்கவேண்டும். இரண்டு பழங்களை விளையாட்டுப் பொருளாக வைத்துக்கொண்டுள்ள பிடிவாதக் குழந்தையைப் பார்த்து, ஒன்றும் கண்டறியாத ஏழைக் குழந்தை ஏங்கி அழுகின்ற நிலைமை கூடாது. இந்தக் குறை எப்போது தீரும்?

[" கள்ளோ? காவியமோ?" என்ற பெயரால் அண்மையில் புதிதாக வெளிவந்துள்ள சிறந்த புனை கதையில் காணப்படும் பொறுக்கு மணிகள் சிலவற்றை மேலே தொகுத்துத் தந்துள்ளோம்.]

—துணையாசிரியர்

வடக்கெல்லை வேங்கடமே

ஆசிரியர் மங்கலங்கிழார்

[இந்தக் கட்டுரையில் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமே என்பதைப் பல்வேறு சான்றுகளுடன் வலியுறுத்துகின்றார் ஆசிரியர் மங்கலங்கிழார். முதியவராகிய அவ்வறிஞர் வடக்கெல்லையை மீட்பதற்கென்றே சித்தூர் மாவட்டத்தின் ஊர்கள் தோறும் சுற்றி தமிழர்—தெலுங்கர் உறவை வளர்த்து ஆந்திரர்களின் ஆதிக்க வலையில் அவர்கள் வீழாதவாறு தடுத்து வருகிறார். சித்தூரைப்பற்றிய எல்லா நுணுக்கமான விஷயங்களையும் நன்கறிந்தவராதலால், அவர் எழுதியுள்ள இக்கட்டுரையை தமிழ் மக்கள் கருத்தூன்றிப் படிப்பாராக!]

—ஆசிரியர்]

தமிழகத்தின் வடக்கெல்லையைப் பற்றிய உண்மைகளைத் தமிழ் மக்கள் இன்னம் போதிய அளவு உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், தமிழ் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளில் தமிழரசுக் கழகத்தைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சியும் சித்தூர் மாவட்டத்தில் தொடர்பு கொள்ளவில்லை. தமிழ்ப் பத்திரிகைகள், தமிழ் எழுத்தாளர்கள் ஆகியவர் நிலையும் இதுபோலத்தான். ஆகவே, சித்தூரைப் பற்றிய—அதில் வாழும் மக்கள் மனநிலை பற்றிய உண்மைகளை அறிய தமிழகத்தாருக்கு வசதியில்லாது போயிற்று. நல்ல வேளையாக தமிழ் ஏடுகளிலே, வேங்கடந்தான் தமிழகத்தின் வடக்கெல்லை என்று வாழையடி வாழையாகத் தோன்றிய புலவர் பெருமக்கள் வற்புறுத்தியிராவிடின், சித்தூரைப்பற்றிய பிரச்சினைக்கு உயிர் கொடுப்பதற்கோ, 'வேங்கடத்தை விடமாட்டோம்;' என்று கோஷித்து மக்களின் உணர்ச்சியைத் தூண்டுவதற்கோ, தமிழரசுக் கழகத்தாரால்

கூட முடிந்திராது. அந்த வகையில் தமிழ் மக்களாகிய நாம் நமது புலவர்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம்.) சித்தூர் மாவட்டத்தில், தமிழரின் உரிமை நிலம் திருப்பதி மலைவரை உள்ளது என்பதைத் தக்க சான்றுகளுடன் உணர்த்துவதே இக் கட்டுரையின் கருத்து.

இலக்கணம்

இன்று நம்மிடையே உலவிவரும் தமிழ் இலக்கணங்களில், தொல்காப்பியமே மிகப் பழமையானது. அதன் பாயிரத்தில்,

> வடவேங்கடம் தென்குமரி ஆயிடை
> தமிழ் கூறும் நல்லுலகம்...''

என்ற வரிகளில் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடம் தான் என்பதைப் பனம்பாரனார் வலியுறுத்துகிறார்.

மற்றும், நன்னூலில்,

> குணகடல் குமரி குடகம் வேங்கடம்
> என நான்கெல்லை...

என பவணந்தியாரும்,

> வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம்
> என்றின் நான் செல்லை தமிழது வழக்கே''

எனச் சிகண்டி முனிவரும், தமிழகத்தின் நான்கெல்லைகளைக் கூறுமிடத்து, வடக்கெல்லை வேங்கடம் எனத் தெரிவித்துள்ளனர்.

இலக்கியம்

தமிழ் இலக்கணமேயன்றி, இலக்கியங்களும் வேங்கடத்தையே தமிழகத்தின் வடக்கெல்லையாகக் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரத்தில்,

> குமரி வேங்கடம் குணகுடல் கடலாம்

மண்திணி மருங்கில் தண்தமிழ் வரைப்பில்
நெடியோன் குன்றமும் தொடியோள் பெளவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாடு"
('நெடியோன் குன்றம்' என்பது திருப்பதி மலை.)

என இளங்கோவடிகளும்,

மேற்குப் பவளமலை வேங்கடம் நேர் வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்கு-பார்க்குமியர்
தெற்குப் பிறுகி தமிழ் இருபதின் காதம்
நற்றெண்ணட நாடெனவே நாட்டு.

—தனிப்பாடல்

எனக் கம்பரும் வேங்கடமே தமிழ் நாட்டின் வடக்கெல்லை என்பதை விளக்கிப் போயினர்.

சித்தூர் மாவட்டத்திலுள்ளதும், தெலுங்கர்களால் இன்று காளாஸ்திரி என்று அழைக்கப்படுவதுமான திருக்காளத்திப் பகுதி தமிழ்த் தொண்டை நாட்டைச் சேர்ந்ததே என்பதை,

கயிலையும் கச்சியும் விற்கோலம் முதற் கழுக்குன்றமும்
பயில்வலி தாயமும் பாச்சூரும் அச்சிறுபாக்கமும் நல்
வயிலையும் வல்லம் திருவொற்றியூரும் அரசிலியும்
மயிலையும் ஈசன் மகிழ்ந்த தன்றே தொண்டை
மண்டலமே
('கயிலை' என்பது திருக்காளத்தியாகும்)

—தொண்டை மண்டலச்சதகம்

என்ற படிக்காசுப் புலவரின் பாடலால் அறியலாம்.

கிருஷ்ண தேவராயர் காலத்தில் முதல் அமைச்சராக இருந்த அப்பி அறம் வளர்த்தான் என்பவர் தொண்டை நாட்டுக் கோட்டங்கள் இருபத்து நான்கு என வகுத்தார். அவற்றுள் சந்திரிகிரி, திருப்பதி இரண்டும் அடங்கியுள்ளன.

புராணம்

தமிழ்த் தொண்டை நாட்டிலுள்ள சிவன் கோயில்கள் 32. அதில் திருக்காளத்தியும் ஒன்று. அப்படியே தொண்டை நாட்டு வைணவக் கோயில்கள் 24. அதில், திருவேங்கடமும் ஒன்று.

சித்தூர் மாவட்டத்திலுள்ள திருத்தணிகை, வள்ளி மலை, திருக்காளத்தி, திருப்பதி ஆகிய ஊர்களையும் அவற்றைச் சார்ந்துள்ள திருக்கோயில்களையும் ஆழ்வார்களும், நாயன்மார்களும் புகழ்ந்து பாடியுள்ளனர். இந்தக் கோயில்களுக்கும் ஆந்திர இனத்தவருக்கும் தொடர்புண்டென தெலுங்கு இலக்கியங்களில் சான்று காட்ட முடியுமா?

கல் வெட்டுகள்

சந்திரகிரியில் காணப்படும் கல் வெட்டுகள் நான்கு. அவை அனைத்தும் தமிழிலேயே உள்ளன. திருப்பதியிலுள்ள கல் வெட்டுகள் மொத்தம் 38. அவற்றுள் கன்னடம் 2, தெலுங்கு 4, தெலுங்கும் தமிழும் கலந்தவை 2, கிரந்தம் 1, கிரந்தமும் தமிழும் கலந்தவை 4, தமிழ் 25.

திருக்காளத்திப் பதியில் உள்ள கல்வெட்டுகள் மொத்தம் 80. அவற்றில் தெலுங்கு ஒன்றே ஒன்று. சமஸ்கிருதம் 1, தமிழும் கிரந்தமும் கலந்தவை 9, தமிழ் 69. காளத்திக்கு அருகில் தொண்டைநாடு என்று ஊர் உளது. அங்குள்ள கோதண்ட ராமசுவாமி கோயிலின் நிர்வாகத்திற்காக மதுரை கொண்டபரகேசரி வர்ம சோழமன்னன் பொருளும், நிலமும் கொடுத்ததாக அக் கோயில்களிலுள்ள கல்வெட்டுகளில் எழுதப்பட்டுள்ளன.

திருச்சானூரிலுள்ள கல் வெட்டுகள் 5. அவை அனைத்தும் தமிழே.

இவ்வாறு இலக்கணம், இலக்கியம், புராணம், கல்வெட்டுகள் ஆகிய எல்லாவற்றிலிருந்தும் சான்று காட்டி வேங்கடமும் அதை அடுத்துள்ள பல தாலூக்காக்களும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவையே என அழுத்தந் திருத்தமாக கூறமுடியும்.

பண்டைய சான்றுகள் மட்டுமல்ல; இன்றைய சூழ்நிலையைக் கொண்டு பார்த்தாலும் வேங்கடம் தமிழ் நாட்டின் வடக்கெல்லையே என தமிழர் உறுதியாகக் கூறமுடியும்.

அரசாங்க ஏடுகளில் ஆதாரம்

சித்தூர் ஜில்லாவானது 1911-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி யன்று உண்டாக்கப்பட்டது. அன்றிருந்த ஆங்கில ஆட்சி நிர்வாக நலனின் பொருட்டு, வடாற்காடு ஜில்லாவுக்கு வடக்கே திருப்பதி மலை வரையுள்ள பல தாலூக்காக்களையும், கடப்பை ஜில்லாவின் தெற்கேயுள்ள மதனபல்லி, வாயல்பாடி ஆகிய இரு தாலூக்காக்களை யும் ஒன்றாக்கி சித்தூர் ஜில்லா உருவாக்கப்பட்டது. அதுவரை திருப்பதி மலை வடாற்காடு ஜில்லாவில் தான் இருந்து வந்தது. இது அன்றிருந்த ஆங்கில அதிகார வர்க்கத்தினரின் செயல்; நிர்வாக நலனை யொட்டியே செய்யப்பட்டது.

அப்போதும், புதிதாக உண்டாக்கப்பட்ட சித்தூர் ஜில்லாவை அரசாங்கத்தினர் தமிழ் ஜில்லாவாகவே கருதி வந்தனர். சான்றாக அரசாங்கத்தார் சென்னை மாகாண ஜில்லாக்களை பல தொகுதிக ளாகத் தொகுத்ததில், 'மத்திய ஜில்லாக்கள்' என்ற தலைப்பில், மதுரை, திருச்சிராப்பள்ளி, நீலகிரி, கோயமுத்தூர், வடாற்காடு, ஆகிய தமிழ் ஜில்லாக்களோடு சித்தூர் ஜில்லாவையும் சேர்த்திருப் பது குறிப்பிடத்தக்கது. சித்தூர் மாவட்டத்தில் பெரும்பாலான தாலுக்காக்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவை. எனவே, அரசாங்கத் தார், அந்த ஜில்லாவுக்கு தமிழரே பெரும்பான்மையினராக வாழும் சித்தூரைத் தலைநகராக்கி அதைத் தமிழ் ஜில்லாவாகவே கருதி வந்த தில் வியப்பில்லை.

இயற்கைப் பிரிவினை

பல தமிழ் தாலுக்காக்களையும் சில தெலுங்கு தாலுக்காக்களையும் சேர்த்து சித்தூர் ஜில்லா உருவாக்கப்பட்டாலும், இயற்கை நில அமைப்பானது இரு மொழி நிலங்களையும் பிரித்தே காட்டுகின்றது. சித்தூர் ஜில்லாவின் தெற்குப்பகுதி விரிந்த நிலப்பரப்பாகவும், வடக்குப் பகுதி தொடர்ந்த மலைத் தொடராகவும் அமைந்துள்ளன. எனவே, சித்தூர் ஜில்லாவின் தெற்குப்பகுதி மக்கள் தமிழ் நாட்டோடு கலக்க பல வகையிலும் இயற்கை வசதி யளித்துள்ளது. ஆனால், ஆந்திர நாட்டோடு கலக்க இயற்கை அவ்வளவாக துணை புரியவில்லை. சித்தூர் ஜில்லாவின் மக்கள் வாணிபம், தொழில் ஆகியவைகளில் வேலூர், சென்னை போன்ற நகரங்களுடன்தான் தொடர்பு கொண்டுள்ளனர்.

இந்த ஜில்லாவில் வாழும் வேளாளர், செங்குந்தர், வன்னியர், வாணியர், ஆதித்திராவிடர் முதலிய தமிழ்ச் சாதியினரும், நாயுடுகள், ரெட்டிகள், இராசுக்கள், யாதவர் போன்ற தெலுங்கு சாதியினரும், சென்னை, செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு, முதலிய ஜில்லாக்களிலுள்ள தங்கள் தங்கள் சாதியினருடன் உறவு கொண்டுள்ளனர். மிகப் பெரும்பாலான தெலுங்கர் ஆந்திர நாட்டு மக்களோடு குலத்தொடர்பு கொள்வதே கிடையாது. எனவே, அவர்கள் தெலுங்கு பேசினாலும் தமிழ் நாட்டினரே என்பதில் ஐயமில்லை.

திருத்தணி, புத்தூர், சித்தூர், கங்குந்தி (ஜமீன்) ஆகிய தாலூக்காக்களில் தமிழரே அதிகம். அதுபோலவே, புங்கனூர் பல்லமனேரி, சந்திரகிரி, காளத்தி (ஜமீன்) ஆகிய தாலூக்காக்களில் தெலுங்கர்கள் அதிகமாக வாழ்கின்றனர். பண்பாட்டில் இவ்விரு தரப்பினரும் தமிழ் நாட்டவரே.

தெலுங்கரும் ஆந்திரரும்

தெலுங்கர் வேறு; ஆந்திரர் வேறு. இவ்விரு தரப்பினரும் ஒரே மரபினரன்று. தெலுங்கு என்பது காளத்திக்கு வடக்கே திரி

லிங்கானம் (மூன்று லிங்க எல்லை கொண்டது) என்னும் இடத்தை யும், அங்கு வாழும் மக்களையும் அவர்கள் பேசும் மொழியையும் குறிக்கும்.

ஆந்திரம் என்பது அவ்வாறன்று. அது கிருஷ்ணு, கோதா வரி நதிகளின் இடை நிலத்தை அரசாண்ட அரசரின் வமிசப் பெய ராகும். அது மொழியைக் குறிப்பதன்று. எனவே, தெலுங்கருக் கும் ஆந்திரருக்கும் சிறிது மொழித் தொடர்பு யிருப்பதைத் தவிர வேறு வரலாறு, பண்பாடு ஆகியவற்றில் ஒருவித தொடர்பும் கிடையாது.

வெலமா ரெட்டிகள் என்போரின் தாய்மொழி தமிழே. வெலமா என்பது வேளாளர் என்னும் சொல்லின் திரிபு. அவ்வகுப் பினர் சூழ்நிலைபால் தெலுங்கராக மாறினும், இன்றளவும் தமிழ் பேசி, தமிழரோடு தமிழராகவே வாழ்கின்றனர். வேங்கடகிரி, காளத்தி அரச குடும்பத்தினர் வெலமா வகுப்பைச் சேர்ந்தவரே யாவர்.

புங்கனூர் ஜமீன் குடும்பத்தார் தமிழரல்ல வெனலாம். ஆனல், அவர்கள் ஆந்திரரும் அல்லர்; கன்னடராவர். தமிழ் நாட்டில் எல்லா ஜில்லாக்களிலும் அமைச்சர், அசெம்பிளி உறுப்பினர், அர சாங்க அலுவலாளர், ஆகிய பதவிகளில் தமிழரைப் போலவே தெலுங் கரும் இருந்து வருவது கண்கூடு. இவ்வாறு ஆந்திர ஜில்லாக்களில் தெலுங்கர் ஒருவராவது உயர்ந்த பதவி பெற்றிருப்பதாகக் கூற முடியுமா? தெலுங்கருக்கும் தமிழருக்கும் உள்ள ஒற்றுமை இதனல் புலப்படுகின்றதன்றோ? உண்மை இவ்வாறிருக்க, ஒரு சில அர சியல் வாதிகள் தெலுங்கரை ஆந்திரர்களாகக் கருதுவதும் தமிழ நாட்டைத் துண்டாட நினைப்பதும் அநீதியல்லவா?

ஆங்கிலோ-இந்தியர்களின் (சட்டைக்காரர்களின்) தாய்மொழி ஆங்கிலமாகும். அதனால் அவர்கள் ஆங்கில இனத்தவரென்றும், அவர்கள் தாயகம் இங்கிலாந்து தேசமென்றும் கூறுகிறோமா? இல்லையே. அவர்களையும் இந்தியராகத்தானே எண்ணுகிறோம். அது போலத்தான் தெலுங்கர் மொழியால் நம்மிடமிருந்து சிறிதளவு வேறுபட்டிருப்பினும் இதர எல்லா வகையிலும் தமிழ் நாட்டவரே யாவர்.

ஆகவே, தமிழகத்தின் வடக்கெல்லைச் சுவர் திருப்பதி மலையே. தெற்கே குமரிமுனை முதல், வடக்கே வடவேங்கட மலை வரை சென்னை நகரைத் தலை நகராகக் கொண்டது தமிழ்நாடு.

கப்பலோட்டிய தமிழன்

இந்திய சுதந்திரப் போரின் தமிழகத் தளபதி, வீரர் வ. உ. சிதம்பரனாரின் புரட்சி மிக்க வாழ்க்கை வரலாறு.

தமிழ் முரசு ஆசிரியர், திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் எழுதியது. புதிய பதிப்பு வெளிவந்து விட்டது.

விலை ரூ. 1—4—0

இன்ப நிலையம்

தியாகராய நகர் • சென்னை 17

கருணைக் கடல்

வேணுகோபால்

"ஐயா! பசி காதடைக்குது. மூணு நாளா ஆகாரமில்லீங்க; காலணா இருந்தா கொடுங்க சாமி." என்று கெஞ்சினான் சிறுவன்.

"சீ, நாயே; எட்டப்போடா மடையா, நல்லா...உலக்கை மாதிரியா யிருக்கியே, எங்கேனும் வேலை செய்யறதுக்கு என்ன கேடு" என்று எறிந்து விழுந்தார் ஒரு தொந்தி கொழுத்த பெரிய மனிதர்.

சிறுவன் சற்று நகர்ந்து சென்றான்.

"அம்மா! ரொம்ப பசிக்குது. களைப்பா யிருக்குது. பைசா கொடம்மா."

"மூஞ்சியைப்பாரு, மூதேவியாட்டம். சே, காலையிலே எங்காவது தொலைஞ்சிப்போ. எதிரே நிற்காதே; போடா அப்புறம்." என்று அந்த சிங்காரி சீறி விழுந்தாள்.

இன்னும் சற்று முன்னேறிச் சென்றான் சிறுவன்.

"அம்மா பசி........."

"சீ சீ தொலைஞ்சி போடா"

"ஐயா பிச்சை..."

"அப்பறம் போடா அயோக்கியப் பயலே" இப்படியான வசை மொழிகள் அவன் தினசரி வாழ்க்கையில் ஏராளம். புத்தி தெரிந்த நாள்முதல் அவன் பெற்றோர்கள் யாரென்றே அவனுக்குத் தெரியாது. அதைப்பற்றி அவன் கவலைப்படவுமில்லை. அவனுடைய கவலையெல்லாம் அன்றாட வாழ்க்கையில் வயிறு வளர்ப்பதற்கு வழி யென்ன என்பதே. பூமியில் பிறந்த பின்னர் புத்தி தெரிந்த நாள் முதல் கை

வந்திப் பிழைக்கும் தொழிலைத் தவிர வேறு கைத்தொழில் எதையும் அறியாதவன்.

அவன் காதில் கேட்ட வசைச் சொற்களுக்கும், கன்னத்தில் வாங்கிய அறைகளுக்கும் கணக்கே கிடையாது. இவ்வளவும் சாண் வயிற்றுக்காக. சே, என்ன வாழ்க்கை.

நாலடி உயரம்; கறுத்த மேனி; உடலோடு ஒட்டிக்காய்ந்த அழுக்குப்படைகள். மானத்தைக் காத்து நிற்கும் ஒரு முழக் கோமணம். பார்க்கச் சகிக்காத அழுக்குப்படிந்த பரட்டைத் தலை. ஏக்கமும் கவலையும் குடிகொண்ட வெளிறிய முகம். இது தான் அவனது தோற்றம்.

"பசி—ஐயோ பசிக்குதே—கடவுளே கண்ணில்லையா" என்பவை அவனது இடைவிடாத கோஷங்கள்.

உணவு கண்ட இடத்திற்கு ஓடுவதும், காலணாவுக்காக கண்டவர்களை யெல்லாம் கும்பிடுவதும்தான் அவனது தொழில்.

"காலையிலிருந்து உச்சிவேளை வரை எங்கெங்கே சுற்றித் திரிந்தாச்சி. இன்னும் பைசாக்கூட வந்தபாடில்லை. வெய்யிலோ கொளுத்துகிறது. பசி—தாகம்—களைப்பு மேலீட்டால் நடக்க முடியவில்லை. தள்ளாடி மெதுவாக கொஞ்சம் நடந்து அந்த பஸ் ஸ்டாண்டிற்குச் சென்றால் ஒரு அரையணாவாவது கிடைக்கும்......"

மனதில் திடங்கொண்டு நடந்தான்.

"ஐயா, பசிக்குது; காலணா கொடுங்க சாமி..."

அந்தச் சிறுவன் ஒருவரைத் தவறாது கை யேந்திக் கேட்டு விட்டான். பயனில்லை. முகம் சுருங்கியது. இன்று பகல்சாப்பாட்டிற்கு வழியில்லை. பட்டினி—ஆம், அது அவனுடைய சொத்து.

*　　*　　*　　*

ஆதவன் மறைந்து விட்டான்; என்றாலும் இன்னும் இருட்ட வில்லை.

"ஐயோ அப்பா! அப்பா!! என் கையிலிருந்த காசை பிடுங் கிண்டு ஓட்றாம்பா..."

"யாரது?"

"அதோ, அவன் தாம்பா!"

எழுந்து ஓடினார் பெரிய மனிதர். ஓட சக்தியற்ற சிறுவன் பிடி பட்டான். பயத்தால் அவன் உடல் உதறியது. மூச்சு திணறியது.

"ஏண்டா, படவா! என்ன தைரியம்டா, காசையா பிடுங் கிண்டு ஓடரே. போக்கிரி, எடடா காசை."

கையில் இறுக மூடியிருந்த நாலணா காசை பெரியவரிடம் கொடுத்தான். இதற்குள் ஒரு சிறு கூட்டம் கூடிவிட்டது.

"இரண்டு போடுங்கள் சார். திருட்டுப்பயல் இப்படித்தான் செய்கிறது" என்றார் ஒரு சரிகை தலைப்பாக்காரர்.

"பேசாமே போலீசில் பிடித்துக் கொடுத்துடுங்கோ ஸார்" என்றார் ஒரு சட்டம் தெரிந்த மேதாவி.

"சே, போவுதுங்க பேசாமே இரண்டு கொடுத்து விரட்டிடுங்க போறான் பாவம்" என்று பரிந்து பேசினார் ஒரு வயோதிகர்.

பளார்—பளார்.

"நில்லாதே கழுதை ஓடிப்போ—நின்னா எலும்பு முறிஞ்சிடும்"

"வறுமையோடு போராடுகிறேன் நான்; பணத்தோடு விளை யாடுகிறார்கள் அவர்கள். ஒரு தலைமுறைக்குப் பணத்தைக் குவித்து வைக்கலாம். ஆனால், நான் ஒருவேளைச் சோற்றுக்கு நாலணா அப கரித்தால் அது திருடு—ஏன் அபகரித்தேன்? பசியைப்போக்க— அதற்குப் பரிசு—(கன்னத்தை தடவிப்பார்த்துக் கொண்டான்) அறை;

தன் பலங்கொண்ட மட்டும் ஓங்கியறைந்த பலமான அறை. "ஐயோ ஆண்டவனே! ஏன் என்னை இவ்வுலகத்தில் படைத்தாய்; ஒரு பிச்சைக்காரனைக் காப்பாற்ற வகையற்ற—இல்லை மனமற்ற மனித சமூகத்தில்........."

(ரஷிய நாட்டிலே பிச்சைக்காரர்களைக் காணமுடியாது; அங்கு எல்லோரும் தொழிலாளிகளே. அங்கு கரமேந்திப் பிழைக்கும் கும்பலைக் காணமுடியாது என்று ரேடியோவில் பேசுவது அவன் காதுகளில் விழுகிறது)

"கடவுளே அந்த ரஷிய நாட்டிலாவது என்னைப் பிறப்பித்து இருக்கலாகாதா?"

எதிரில் கடல் அலைகள் "ஹோ" வென்று கோஷமிட்டுக் கொண்டு அவன் காலைப்பிடித்திழுக்க முயல்வதுபோல் தொட்டுத் தொட்டுப் போனது.

"சீ, இந்தக் கருணையற்ற உலகத்தில்—மனித சமூகத்தில்-வாழ்வதை......"

ஆம்! இதோ கடல் என்னை "வா, வா" என்று அழைக்கின்றது. கருணையற்ற உலகத்தில் கவலைப்படுவதைவிட, ஆழமிக்க கடலில் அமைதிகொள்வதே மேல்.

"ஹோ" என்ற சத்தத்துடனே அவனுக்குத் தன்னிடத்தே அடைக்கலம் தந்தது கடல். மனித சமூகம் ஏற்க மறுத்த சிறுவனைக் கருணைக்கடல் ஏற்றுக்கொண்டது. மனங் கசந்த சிறுவனுக்கு மனமுவந்து தஞ்சம் தந்த கருணைக்கடல் வாழ்க!

நம்மை அறிந்தோமா?

ரா. வைத்திலிங்கம்

தமிழா! உனது வரலாறு இன்று நேற்று ஆரம்பமாகவில்லை. இந்தப் பரந்த உலகில் உனது சரித்திரம்தான் முதன் முதல் ஆரம்பமாயிற்று. அன்று முதல் இன்றுவரை உனது சரித்திரம் வீரத்தின் எடுத்துக்காட்டாக விளங்கி வருவதை நீ உணர்கிறாயா?

புறநானூற்றை விட்டு விடுவோம். அது பண்டையக் கதை. பதினெட்டாம் நூற்றாண்டிற்கு வருவோம். பாளையக்காரர்களின் உரிமைப் போராட்டங்களை நினைத்தாலும் நெஞ்சு நிமிரும். இவர்கள் கலகக்காரர்கள் என்று அன்னியர்கள் சரித்திரமென்ற பெயரால் நமக்கு அறிமுகப் படுத்தினார்கள். ஆனால், இன்று தமிழன் இவர்களை ஏகாதிபத்திய எதிரிகள் என்பதை உணர்ந்துகொண்டான். அன்னியர்களை, தம் நாட்டில் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்காத தன்மான வீரர்களான அவர்கள் கலகக்காரர்கள் அல்ல, என்று தமிழன் தன் சந்ததியினருக்கு உண்மைச் சரித்திரத்தை எழுதியே தீருவான்.

கும்பினியாரின் ஆதிக்கத்திற்கும் அதிகாரத்திற்கும் அடிபணியோமென்று கடைசி மூச்சுவரை எதிர்த்துப் போராடிய தமிழ்நாட்டு வீரர்கள் எண்ணற்றோர். தமிழர் ஆட்சியை சீர்குலைக்கச் சதிசெய்த அன்னியர் ஆணையை ஏற்க மறுத்த குற்றத்திற்காக, மரணத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்ற வீரர்களின் தன்மான உணர்ச்சி எந்தத் தமிழனையும் ஒரு உலுக்கு உலுக்கத்தான் செய்யும். பீரங்கி வாயில் வைத்து புகைத்தபோதும், நாட்டுப்பற்றுடன் சுதந்திர

முழக்கஞ் செய்த தமிழ்ப்பெரு வீரர்கள் எத்தனைபேரை நாம் அறிவோம்? கும்பினியாரை எதிர்த்து, தூக்குமேடையையும், துப்பாக்கி முனையையும் துச்சமாகக் கருதி தமிழ் நாட்டில் அன்னிய ஆதிக்கத்தை அனுமதியோமென்று, தங்கள் கடைசி சொட்டு ரத்தத்தையும் சிந்திய தமிழர்களின் வீர விலாசத்தை நினைத்து நம் நெஞ்சு குமுறவில்லையா ?

துரதிர்ஷ்டவசமாக அந்த வீரம் செறிந்த சம்பவங்கள் தமிழரின் நினைவிலிருந்து நீங்கும் தன்மையில் நிர்ப்பந்தத்திற் காளாக வேண்டியதாயிற்று. தனது சரித்திரத்தை நினைத்து நெஞ்சு துடித்து, தன் உரிமையை நிலை நாட்டத் துள்ளித் துடிக்காமல், தமிழன் சரித்திரத்தைத் தலைகீழ் பாடமாக ஒப்புவிக்கின்றான். இந்த இழிநிலை அழிந்தொழிய வேண்டும். பிறந்த நாட்டின் பெருமையைத் தெரிந்து கொள்ளாமல், வேற்று நாட்டின் வரலாற்றைக் குறித்து வாதம் புரிவது நமது அடிமை மோகத்தை விளம்பரப்படுத்துவதாகும். தன் இனத்தில் தோன்றிய எண்ணற்ற வீரர்களுக்கு வணக்கம் செலுத்த வகை கெட்டுப்போன தமிழன், வேற்று நாட்டு வீரர்களைப் பற்றி பேசுவது பேடித்தனம். தமிழனை தலை குனிந்து நிற்பது நமக்குத் தெரியவில்லையா ?

காலத்தின் கொடுமையால் ஆட்டு மந்தையுடன் சேர சேர்ந்த சிங்கம், தான் யார் என்பதை மறந்து, மதியிழந்து செம்மறி ஆடுகளுடன் அடங்கி ஒடுங்கி சுற்றித்திரிந்து சுருண்டு வாடியதாம்! அந்நிலையில், தமிழன் இன்று திசை தவறித் திகைக்கின்றான். சிங்கம் தண்ணீர் தேக்கத்தில் தன் நிழலைக் கண்டவுடன் தான் கேவலம் ஆட்டுக் கூட்டத்தை சேர்ந்தவன் அல்ல, மிருகேந்திரன் என்று எவ்வாறு தன்

உணர்வு பெற்றதோ அதே போன்று தமிழனும் தன் உண்மை நிலை உணர்ந்து தலை நிமிர்ந்து தன்னாட்சி பெறுவதற்கு, அவனது சரித்திரம் அவனுக்குத் தெரியவேண்டும்.

தமிழன் கூலியாகவும் வாழவில்லை. கோழையாகவும் இருக்கவில்லை. திக்கு எட்டும் தமிழ்க்கொடி நாட்டி அரசாண்டான். திரை கடல் தாண்டி தமிழன் தன் வீரத்தை நிலைநாட்டி, வெற்றி முரசு கொட்டி வீர வாழ்வு வாழ்ந்தான். கரும்புத்தோட்டத்திற்கும், தேயிலைத் தோட்டத்திற்கும் ஒப்பந்தக் கூலியாக கப்பலேறி ஒப்பாரி வைக்கவில்லை. தமிழனது வீரத்திற்கு உவமை கூறி ஒப்பிடுவதற்கு உலக சரித்திரத்தில் வேறு இனமில்லை யென்று துணிவாகக் கூறலாம். ஆனால் நாம் இன்று அந்த வீரர்களின் வரலாறு முழுவதையும் அறிய முடியாத நிலைக்கு வந்திருக்கிறோம். அன்னிய ஆதிக்கத்தின் பலன் இது.

ரஜபுத்திரர்களின் வீரச் செயல்களைக் குறித்து வெளிவந்த நூல்கள் எண்ணில் அடங்கா. இன்னும் வந்த வண்ணமாக இருக்கின்றன. மராட்டியர்களின் வீரப்பிரதாபங்கள் பாரெங்கும் பறை சாற்றப்படுகிறது. நாமும் படிக்கிறோம், கேட்கிறோம், போற்றுகிறோம், பாராட்டுகிறோம். ஆனால் அவர்களைப்போன்று ஏன்? அதற்கும் ஒரு படி அதிகமாக வீர வாழ்க்கை நடத்திய தமிழ் வீரர்களது வீர விலாச வரலாறுகள் பெரும்பாலும் இன்னும் புதை பொருளாகவே இருக்கின்றன.

தமிழ் நாட்டில் பிறந்த ஒரே குற்றத்திற்காக எத்தனையோ ஒப்பற்ற தமிழ் வீரர்களது பெயர்கள் கூட வெளிவராமல் போய்விட்டன. இதே வீரர்கள் வேறு நாடுகளில்

தோன்றியிருந்தால் அவர்கள் பெருமைகளை நாமே பறை சாற்றுவோம். சிலை நாட்டியும் சிறப்பிப்போம். தன் இனத்தானை மதிக்கும் குணம் தமிழனிடம் என்று தோன்றுகிறதோ அன்றே தமிழன் தன் மதிப்புடன் வாழ முடியும்.

இந்தியாவின் வரலாற்றில், தென் இந்திய வரலாறு ஏதோ பெயரளவில் இடம் பெற்றிருக்கிறது. வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு இன்று கூட தென் இந்திய வரலாற்றில் கருத்தைச் செலுத்த கருணை பிறக்கவில்லை. தமிழ் நாட்டு வரலாறே, இன்றைய இந்து தேச சரித்திரப் புத்தகங்களில் இல்லை யென்று கூறிவிடலாம். கூடுதலாகக் கூறின் இரண்டு மூன்று பக்கங்களில் தமிழ் நாட்டின் சரித்திரம் அடங்கி யிருப்பதை நாம் காண்கின்றோம். தமிழ் மாணவர்கள் தங்கள் நாட்டு சரித்திரத்தைத் தெரிந்துகொள்ளாமல், வேற்று நாட்டு வரலாற்றை, விழுந்து விழுந்து கற்கும் விந்தையை உலகில் வேறு எங்கும் காண முடியாது. என்ன அவமானம்? தமிழ் நாட்டு இளைஞன் தன் நாட்டு வரலாற்றைத் தெரிந்துகொள்ள வழியில்லை. இதை நினைத்தால் எந்தத் தமிழனின் ரத்தம்தான் கொதிக்காது? தனது இனம் ஒவ்வொரு துறையிலும் உயர்ந்தோங்கி வாழ தமிழன் தனியாட்சி செலுத்த முரசு கொட்டிவிட்டான்,

தொழிலரசு

"ஞானம்"

ஔவையார் சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர். இவரது காலத்தைப்பற்றி ஆராய்ச்சியாளரிடையே கருத்து வேற்றுமை இருக்கிறது. ஆனால் நமக்கு வேண்டியது அவரது காலமல்ல; கருத்தே யாகும்.

ஔவையார் இயற்றிய பனுவல்கள் பல. அவரது பாடல்கள் பாமரரும் புரிந்து கொள்ளும் எளிமை வாய்ந்தவை. பண்டிதரும் போற்றத்தகும் திட்ப, நுட்பங்கள் செறிந்தவை.

தமிழ்க் கிழவி ஔவை புரட்சிக் கவி. அரசியல் ஞானி. சமூக சீர்திருத்த வாதி. இதற்கான சான்றுகளை அவரது பாடல்களில் பரக்கக் காணலாம்.

ஔவை காலத்தில் தமிழகம் சுதந்திரம் பெற்று இருந்தது. தமிழ் மொழி அரியாசனத்திலிருந்து ஆட்சி புரிந்த காலம் அது. தமிழினத்தவர் கல்வி, அறிவு, செல்வம் ஆகியவற்றிற் சிறந்து விளங்கினர். இக்காலத்தில்தான் ஔவையார் தோன்றி, மக்கள் சமுதாயம் மாண்புடன் வாழ்வதற்கு வழி காட்டும் பாக்கள் பல இயற்றினார். அவரது பாடல்களில் ஒன்றின் கருத்தை இங்கு ஆராய்வோம்.

ஔவையார் இப்பாடல் இயற்றிய காலத்தில், நாட்டில் நால் வருண ஆசிரமம் நடைமுறையி லிருந்தது. இந்திய சமுதாயம் அந்தணர், அரசர், வணிகர், தொழிலாளர் என நால் வருணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்தணர் வேதமோதுவதையும், அரசர் நாடாள்வதையும், வணிகர் வியாபாரம் செய்வதையும், தொழிலாளர் விவசாயம் முதலிய பொருளுற்பத்தி செய்வதையும் தொழிலாகக் கொண்டிருந்தனர்.

தனிப்பாடற்றிரட்டில் ஔவையின் பெயரால் காணப் படும் வெண்பா ஒன்றில், மேற்சொன்ன நால் வருணத்தவரில், அரசியலை நடத்தும் அமைச்சனாக வருவதற்குத் தகுதியுள்ள வருணத்தார் யார் என்பது நன்கு ஆராயப்பட்டுள்ளது. நான்காம் வருணத்தவராகிய தொழிலாளர் வர்க்கத்தினரே நாடாளத் தக்கவர் என்பதை அறிவுக்கும், அனுபவத்திற் கும் பொருந்தும் வகையில், ஆதாரத்துடன் நிரூபித்துள்ளார் ஔவையார். அதன் முதலடியில்,

"நூலெனிலோ கோல் சாயும்"

'நூலறிவு அதாவது சாத்திரம் படித்த சமயவாதிகள் அமைச்சரானாலோ செங்கோல் முறை பிறழும்' என்கிறார். கலையுரைத்த கற்பனை யெல்லாம் நிலையெனக் கொண்டாடித் தத்தம் சமயம்தான் மெய், ஏனைய சமயமெல்லாம் பொய் எனச் சாதிக்கும் சமயவாதிகள் ஆட்சிபுரிந்தால், சாதிக்கொரு நீதி கூறுவது அரசாங்கத்தின் அன்றாடத் தொழிலாக அமை யும் என ஔவை நம்பினார் போலும்! "சாதி இரண்டொழிய வேறில்லை" என்பதும் அவரது மந்திர மல்லவா!

இரண்டாவது வரியில்,

"நுந்தமரேல் வெஞ்சமராம்"

"உம்மவராகிய க்ஷத்திரியர் ஆட்சி புரியின் ஓயாது போர் விளையும்."

க்ஷத்திரியருக்குப் போர் செய்வதே தொழில்; அதில் அடையும் புகழே அவர்க்குரிய சன்மானம். ஆதலால்தான், 'நானில மதனில் உண்டு போரென நவிலின் -அச்சொல் தேனி னுங் களிப்புச் செய்யும் சிந்தையர் மறவர்.' என்றார் கம்பரும். எனவே போரை விரும்பும் க்ஷத்திரியர் ஆட்சியில் குடிமக்கள் யுத்த பயமின்றி வாழ்தல் இயலாது. இனி,

"கோலேனிலோ ஆங்கே குடிசாயும்"

"பொருளை நிறுப்பதற்கும் ஏற்பட்ட நிறைகோலைப் பிடித்த வணிகர் ஆட்சிபுரிந்தால் அப்பொழுதே குடிகள் அல்லலுற்று அழிவர்."

வியாபாரக் கூட்டத்தினர் எப்பொழுதும் தங்கள் சொந்த லாபத்தையே விரும்புபவர். இத்தகைய சுயநலச் சிந்தையுடையார் அரசாங்க ஆதிக்கத்தைக் கைக்கொண்டால் அந்நாட்டில் பொருளாதாரச் சமத்துவம் இருத்தல் இயலாது. நாட்டின் பொதுச் செல்வம் அனைத்தும் ஒரு சாராரிடையே குவிந்து கிடக்கும் சுரண்டல் கொள்கைக்கு அரசியலார் ஆதரவளிப்பர். இதன் பயனாக குடிகள் பஞ்சத்திற்கும், பிணிக்கும் இரையாகி அழிய நேரும். ஆதலால், வர்த்தக—முதலாளி ஆட்சியும் வெறுக்கத்தக்கதே.

—"நாலாவான்
மந்திரியும் ஆவான், வழிக்கும் துணையாவான்,"

நான்காம் வருணத்தவனாகிய உழைப்பாளிதான் மந்திரியாவதற்குத் தகுதியுடையவன். மக்களின் வாழ்க்கை வழிக்குத் துணையாவதற்கும் உரியவன் என்பது இதன் பொருள்.

தொழிலாளி உழைத்து உண்ணுபவன். பிறர் உழைப்பில் உண்ணும் சோம்பேறியல்ல. ஆதலால், தொழிலாளி வர்க்கம் ஆட்சிபுரிந்தால் நாட்டில் உற்பத்தி பெருகும். உற்பத்தியான பொருளைத் திறமைக்கும் தேவைக்கும் தக்கபடி பகிர்ந்தளிக்க முடியும். இப்படி மக்கள் எல்லோரும் சாதி, சமய வேற்றுமைகளையெல்லாம் கடந்து வாழ வேண்டுமானால், மனிதர் உழைவை மனிதர் பறிக்கும் மடைமையை ஒழிக்க வேண்டுமானால், மனிதனை மனிதன் கொன்று குவிக்கக் காரணமாயிருக்கும் மண்ணாசையை அழிக்க வேண்டுமானால், தொழிலாளர் அரசு ஏற்பட்டே தீரவேண்டும். 'எல்லோரும் ஓர் இனம்' என்ற சமரச

நோக்கத்தையும் நாட்டின் செல்வமனைத்தும் மக்களின் பொதுச் செல்வம், அவற்றை அனுபவிக்கச் "சேரவாரும் செகத்தீரே!" என்ற சமத்துவக் கொள்கையையும் நிலை நாட்டக்கூடிய அரசு ஒன்றுண்டானால், அதுதான் தொழிலாளர் அரசு! அதனால்தான், ஔவையார்,

'அந்த அரசே அரசு!'

இதனால், தொழிலாளரைத் தவிர, ஏனைய வர்க்கத்தினரான சமயவாதிகள், ராணுவத்தினர், வர்த்தக-முதலாளிகள், ஆகியோரால் நடத்தப்படும் அரசாங்கங்கள் அரசு என்ற பெயருக்கே ஏற்றன வல்ல; அவை அனைத்தும் ஒரு கூட்டத்தாரின் ஆதிக்கமே யாகும் என்பது உணர்த்தப்படுகிறது. இனி, முழு வெண்பாவையும் கவனிப்போம்,

" நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ ஆங்கே குடிசாயும்—நாலாவான்
மந்திரியும் ஆவான், வழிக்குத் துணையாவான்
அந்த அரசே அரசு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வருண பேதத்தைக் 'கடவுள் வகுத்த சட்டம்' என நம்பி, அதையே சமுதாய விதியாக மக்கள் அனுஷ்டித்து வந்த காலத்தில், அதற்கு நேர் விரோதமாக, வேறொரு தலைகீழ் விதி வகுத்த ஔவையைப் புரட்சிக் கவி என்பது மிகையாகா தல்லவா?

தொழிலரசின் அவசியத்தை உலகுக்குப் போதித்த ஔவையின் தாயகமாம் தமிழகத்தில் அவரது கனவு நனவாகும் நாள் எந்நாளோ!

புரட்சித் தாய் ஔவை நீடுழி வாழ்க!

●

விதவையின் புதிய வாழ்வு

காரைக்கால் சு. காசிநாதன்

●

உடைமைகள் பொதுவென்ற உண்மையைச்
சொன்னதாலே,
கொடுமைகள் நிறைந்தஆட்சி குப்பனை வெளியேற்றும்
போ(து)
அடிமையை உணராச் சுற்றம் ஆதரித்திட முன்வல்லை.
முடிவிலோர் வெளியூர் நண்பன் முன்வந்தாதரவு தந்தான்.

நண்பனின் நண்பனுக்குக் கலியாணம் நடந்த(து).
அப்போ(து)
அன்புடன் குப்பன் தன்னால் ஆனநல்லுதவி செய்தான்.
வெண்ணகை முகத்தளோர்பெண் விளக்கில் நெய் குறையக்
கண்டோர்
கிண்ணத்திலுள்ள நெய்யை எடுத்தூற்றக் கிட்டேவந்தாள்,

அதனையே குப்பன் கண்டான், அவனும்நெய் யூற்ற வந்தான்.
எதிர்பட்டார் ஓரேபக்கத்தில் இருமுறை ஒதுங்குமாறு,
மதிமுக மங்கை நெய்யை வார்ப்பதைவிட்டுச் சற்றே
ஒதுங்கினாள் மயிலைப்போலாள், குப்பனும் ஒதுங்கிநின்றான்.

திரிபற்றக் கண்டு, மின்னால் இயக்கிய பொறிபோல் சேர்ந்தே,
இருவரும் ஒரே நேரத்தில் எத்தனித்தார் நெய்யூற்ற.
ஒருவரும் ஊற்றவில்லை; ஒதுங்கிப்பின் ஊற்ற வந்தார்.
வரிவிழி கண்ணாள் நாணி வாய் பொத்திச் சிரித்து விட்டாள்.

"சரி சரி நீதான் ஊற்று! தயங்கிட வேண்டாம்." என்று
பெரு மூச்சுவிட்டுக் கொண்டே பின் சென்ற குப்பன், தன்னுள்
உருவான ஒன்றை யாரும் உணராவா றடக்கிக் கொண்டான்.
திரிமாற்றி நெய்யை ஊற்றச் சிற்றிடை நல்லாள் சென்றாள்

நெரிபடு கண்டத்தாலும் நெய்விடப் போம் நேரத்தில்
ஒரு படுகிழவி பார்த்தாள். ஓளைவாய் எச்சில் ஊற்ற

" இரு—இரு வள்ளி ! நெய் ஊற்ருதே. எட்டிப்போ ! நான்
வருகிறேன்." என்று வந்து கிண்ணத்தை வாங்கிக்
கொண்டாள்.

மாராப்புத் துணியினாலே வாயெச்சில் துடைத்துக்கொண்டே
வீராப்பாய்த் திரியைமாற்றி விளக்கிலே நெய்யை விட்டாள்.
ஏரார்ந்த இளையாள் ஏங்கி " ஏன் ?" என்று கேட்பதே போல்
கூரார்ந்த விழி சிவக்கக் கோபமாய்ப் பார்த்து நின்ருள்,

" தலை விதியால் மஞ்சள், பூ, தாலியும் இழந்த பின்பு
கலியாணச் சடங்கில் வந்து கலப்பது சரியோ வள்ளி ?
வலி கொள்ளேல்." என்ருள் பாட்டி. மணமார்ந்தும் நுகராப்
பூவின்

குலையாத மேனிவள்ளி குன்றினாள் ; மயிர்க் கூச்சுற்ருள்,

புண்பட்ட ஆவினைப் போல், புகைபட்ட ஓவியத்தாள்,
கண் சொட்டும் நீர் துடைத்துச் சென்றதைக் கண்டான்
குப்பன்,
மண்பட்ட கண்போல் அன்னோன் மனமறுபடவே, வள்ளிப்
பின்பட்டே சென்ருன், வீட்டுப் பின்கட்டில் தனிப்பட்டார்
கள்.

" என் என்று கேட்ப(து) ?" என்ற எண்ணத்தால் தயங்கிப்,
பின்பு,
" மன்னிக்க என்னை, இங்கு வந்தால் " என்று குப்பன்
சொன்னதும் திரும்பிப் பார்த்துத் துக்கத்தை மறைக்கப்
பார்த்தாள்
மன்னிய எழுத்தழிந்து மாற்றிய(து) ஆச்(சு) அத்துக்கம்.

" ஏனோ நீர் என்னவோ போல் இருக்கின்றீர் ? என்னாலேயோ
ஆனால், போகின்றேன்." என்ருன்.—அது உம்மாலன்று;
போகேல்.
வாரோரும் மாற்றவொண்ணு விதியதாம்; வந்ததேன் நீர் ?"
" வாரோரும் மாற்றவொண்ணு விதியை நான் மாற்ற
வந்தேன்."

" இதுவென்ன புதுமை ஐயா ! என்ன ஆம் முறிந்த பாலால் ?"
" அதன் குணம் மாறிப் போனதாகையால் பயன்படாது."

"விதவையின் கதியஃதன்றோ?"—"வீணில் ஏன்
வருந்துகின்றாய்?
பதமாகக் காய்த்து வைத்துப் பருகாத பாலன்றோ நீ!
முறிபண்டம் பட்டால்தானே முறிந்து போம்; இன்றேல்
அப்பால்
நறு மணம் வீசும் பானம் ஆகாமல் நஞ்சாமோ சொல்?
குறுமனமுடையோர் மூடக் கொள்கையால் குறை
சொல்வார்கள்
அறிவுல குன்னைப் போன்றோர்க் காதரவளிக்கும் உண்மை.

செயற்கையால் மினுக்கு மஞ்சள், சிவப்பு, பூ நிறுத்திவிட்டால்
இயற்கையா யுள்ள நல்ல எழிலும், உள் உணர்வும் மங்கி
வியர்த்தமாய்ப் போமோ, ஓர்பெண் விதவையாயாகிவிட்டால்?
இயற்கையில் விதவைக் கென்றே ஏதேனும் குறி
ஒன்றுண்டோ?

பாழ்பட்ட சமுதாயத்தில் பழகிய பந்துக்கள், உன்
வாழ்வுக்கோர் வேலி கட்டி வைத்தனர். புதிதாய்ச் செய்த
யாழ் நரம்பற்றா லென்ன? மாற்றினால் இசை எழாதோ?"
"தாழ்வுற்ற எனது வாழ்வும் தழைக்குமோ ஆனால் மீண்டும்?"

"ஆலினைப் போல் தழைக்கும் ஐயுறேல். சுற்ற மிட்ட
வேலியைத் தாண்டிச் சென்றால் மேலான வாழ்வுண்டாகும்.
நாலு பேர் மத்தியில் நீ நடைப்பிணமா யிருந்து
காலத்தைக் கழிப்பதன்றி, யாதின்பங் கண்டாய் சொல்லும்!

சிந்தித்துப் பார் நீ முன்பு; நன்றெனத் தெரிந்தால் பின்பு
சந்திப்பு நேர்ந்தால் சொல்லு, சபையில் தாம்பூலமில்லை.
நிந்திப்புக் கிடமாம் இங்கு நிற்பதால், வரட்டுமா நான்?"
"நன்றி! நீர் சென்று வாரும்."—"நல்லது வருகிறேன் நான்."

திருமணம் நடந்தேறிற்று சிறப்பாக. மறுநாட் காலை
ஒரு சிலர் "குசு கு(சு)" என்று பேசினர். ஊமைப் போலத்
"திரு திரு" வென விழித்துச் சிலர் சென்றார். "வள்ளி-குப்பன்
இருவரும் ஓடி விட்டார்" என்ற(து) ஊர் முழுதும் ஒன்றாய்.

"ஔவையார்"

(நாடக விளக்கம்)

தமிழ்க் கிழவி ஔவையை அறியாத தமிழர் இல்லை. 'அறஞ் செய விரும்பு' என்று துவங்கும் ஆத்திச்சூடியின் மூலம் பள்ளிப் பருவத்திலேயே பிள்ளைகளுடன் உறவு கொள்ளும் பெருமை ஔவை மூதாட்டிக்கே உரியது. என்றாலும். ஔவையின் வரலாற்றை, அவ்வம்மையார் தமிழகத்துக்குச் செய்த சேவையை, — தமிழ் மக்களுக்கு விடுத்த செய்தியைக் கோர்வையாகத் தெரிவிக்கும் கதையோ, காவியமோ தமிழகத்தில் இல்லாமல் இருந்தது. அந்தக் குறையைத் தவிர்க்க திரு. எதிராஜர் 'ஔவையார்' என்ற நாடக நூலை எழுதியுள்ளார்.



அந்நூலை வெளியிட்டும், அதை நாடகமாக நடித்தும் திரு. டி, கே. எஸ். சகோதரர்கள் தமிழகத்தில் ஔவையாருடைய செய்தியைப் பரப்பி வருவது மிக மிகப் பாராட்டற்குரியது.

கோவையில், 'ஔவையார்' நாடகம் ஒரு மாதம் வரை நடந்து முடிந்தது. ஔவையைப்பற்றிய செய்திகளைப்பல்வேறு

தமிழ் இலக்கியங்களி லிருந்தும் திரட்டி, ஔவையின் பிறப்பு முதல் இறுதியாக அவர் முத்தி பெறுவது வரை நாடகம் நிகழ் கிறது. நாடகத்தில் கலைமகளே ஔவையாகப் பிறப்பது, விநாயகரை வேண்டிக் கிழத்தனம் பெறுவது, தேவ விமானத் தின் மூலம் கைலாயம் செல்வது போன்ற கற்பனைக் காட்சிகள் அறிவுக்குப் பொருந்துவன அல்ல என்றாலும், அவை போன்ற பல நிகழ்ச்சிகளை நாடகத்திலிருந்து நீக்கி விட்டால், கதையே உருக் குலைந்து விடும். ஆகவே, அத்தகைய நிகழ்ச்சிகளுக்கு அதிக முக்யத்துவம் தராது மின்னலைப் போன்று தோன்றி மறையச் செய்து ஔவையின் தமிழ்த் தொண்டு ஒன்றையே பார்ப்பவரின் உள்ளங்களில் பதியும்படி நாடகத்தை அமைத்து நடத்துவது வரவேற்கத் தக்கதாகும்.

நாடகத்தில், திரு. டி. கே. சண்முகம் ஔவையாகத் தோன்றி மிகத் திறமையாக நடிக்கிறார். சற்றேறக் குறைய முப்பது வயதும், கட்டுறுதி வாய்ந்த உடலும் உடைய இளைஞ ரான அவர், 'சுமார் எண்பது வயதுடைய கிழவியைப் போன்று மேனி சுருங்கி, முதுகு வளைந்து, தளர்ந்த நடையும், மெலிந்த குரலும் காட்டி நடிப்பது ஒரு அதிசயமாகவே தோன்றுகிறது. ஆனால், திரு. டி. கே. சண்முகம் ஒன்றில் மட்டும் கிழத்தனத்தைக் காட்ட முடியவில்லை. தமிழின் பெருமையை உயிர்ப்போடு பாடுங்கால், கிழத்தனம் பறந் தோடி விடுகிறது ஆம்; ஔவை கிழவியானாலும், அவள் வாயில் வழங்கியது **கன்னித் தமிழ்** அல்லவா?

தனிப்பாடற்றிரட்டிலுள்ள ஒவ்வொரு பாடலுக்கும், ஒவ் வொரு அரிய நிகழ்ச்சியைக் கற்பித்து நாடகத்தில் அழகுபடக் காட்டுகின்றனர். அதில் குறிப்பாக, 'இருந்து முகந்திருத்தி' என்ற பாடலுக்குக் கற்பனை செய்யப்பட்டுள்ள ஒரு சம்பவம் பார்ப்போரை ஓயாச் சிரிப்பில் ஆழ்த்துகிறது. அதில் திரு. ராமசாமி, 'அடங்காப் பிடாரி'யின் கணவனாகத் தோன்றி, தமது கொஞ்சு மொழிகளால் தமிழுக்குச் சிறப்பைத் தரு

கிருர். 'அடங்காப் பிடாரி'யாக நடிக்கும் திரு. சீதாராமன் தமது பாத்திரத்திற் கேற்ப நன்ருக நடிக்கிருர்.

ஒளவையின், 'மேழிச் செல்வம் கோழைபடாது' என்பது போன்ற விவசாயத்தின் மேன்மையைக் கூறும் வாக்கியங்களை விளக்குவதற்காக, காட்டப்படும் காட்சியில் காலத்திற்கு ஏற்ற கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. திரு. சிவதாணு விவசாயியாக நடிப்பது நாடகத்திற்கே ஒரு சிறப்பைத் தருகிறது. அரண்மனைச் சேவகம் உயர்வா? உழவுத் தொழில் உயர்வா? என்று விவசாயியும் அவன் மனைவியும் வாதிடுங்கால், ஒளவை தோன்றி 'விவசாயமே உயர்ந்தது' என்று தீர்ப்பளிக்கும் கட்டம் உழவுத் தொழிலாளருக்கு உயர்வு அளிப்பதாய் இருக்கிறது. விவசாயி கஞ்சி குடிக்கும் காட்சியில் தனது நடிப்புத் திறமை முழுவதையும் காட்டுகிருர் திரு. சிவதாணு. அவையவங்களின் அசைப்பிலேயே அவையோரைச் சிரிக்க வைக்கும் திறமை சிவதாணுவுக்கே தனியுரிமை. விவசாயியின் மனைவியாக நடிப்பவரும் தமது நடிப்புத் திறத்தை நன்கு வெளிப்படுத்துகிருர்.

அதிகமான் சார்பாக ஒளவையார் தொண்டைமானிடம் தூது சென்று அவனிடம் வாதிடும்போது, மன்னர்களின் மண்ணாசை வெறியால் மக்கள் கொலையாவதை விளக்குங்கால், இன்றைய உலகத்தின் மகா யுத்தங்களின் கொடுமைகளை நமது நினைவுக்குக் கொண்டு வருகிருர், ஒளவையாக நடிக்கும் திரு. டி. கே. சண்முகம்.

அதிகமானின் மனைவியாக நடிக்கும் திருமதி. திரௌபதை 'வம்புக்கு வந்த தொண்டைமானை அரண்மனையில் சந்தித்து சமரசம் பேசுவதைவிட, போர் முனையில் சந்தித்து அழிந்து விடுவதே மேல்' என்ற கருத்துப்பட வீரம் ததும்பப் பேசுமிடத்தில் பண்டைத் தமிழ் மக்களின் வீரத்தை நன்கு விளக்குகிருர். இவரும், பாரி வேந்தனின் மகளிரான, அங்கவை, சங்கவையாக நடிக்கும் இரு பெண்களும் மிக நன்ருக

நடிப்பதுடன், அருமையாகவும் பாடுகின்றனர். குறிப்பாக, சிறந்த எழுத்தாளரான திரு. கு. ச. கிருஷ்ணமூர்த்தி எழுதிய "பெருமை கொள்வாய் தமிழா!" என்ற பாடலைப் பாடும் போது, கேட்போர் தமிழினத்தின் திறமையை தமிழ் நாட்டின் பெருமையைத் தவிர வேறொன்றையும் சிந்தியாவண்ணம் அவர்களது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடுகின்றனர்.

மற்றும், புலவர் சிகாமணிகளாக நடிப்பவர்களும், இதர எல்லா நடிகர்களும் தங்கள் பாத்திரங்களுக்கேற்ப திறம்பட நடிக்கின்றனர். சில தனிப்பாடல்களை வைத்து, ஒரு நாடகத்தை உருவாக்கிய ஆசிரியருக்கும், அதைத் திறம்பட நடித்து நாட்டில் தமிழ் முழக்கம் செய்யும் மதுரை பாலசண்முகானந்த சபையோருக்கும் தமிழகம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

கடந்த 30-11-47-ல் நடந்த நாடகத்திற்கு கோவை நகராண்மைக் கழக ஆணையாளர் திரு. சி. கதிர்வேல் அவர்கள் தலைமை வகித்து அன்றைய நாடகத்தின் வசூல் ரூ. 1619-8-0 யும், ஆசிரியர் திரு. பி. எதிராஜர் அவர்களுக்கு சபையின் சார்பாக அன்பளிப்பாக ஈந்தார். தலைவரும், ம. பொ. சிவஞானமும் நடிகர்களையும், ஆசிரியரையும் பாராட்டிப் பேசினர்.

வெளியிட்டோர்: ம. பொ. சிவஞானம் 1-98 இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி சென்னை. அச்சிட்டோர் திரு. கே. தி. நாகலிங்க முதலியார் செங்குந்த மித்திரன் அச்சகம் சென்னை.

பதிவு எண். எம். 4803 "தமிழ் முரசு" 15, டிசம்பர், 1947

டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகம்.

கோவை ஷண்முகா தியேட்டரில்

9—12 47 முதல் தினசரி

முள்ளில் ரோஜா

[*by* ப. நீலகண்டன்]

•

அவள் ஒரு தாசி! கற்பின் உருவாய் வந்த கணிகை!! ஒழுக்கத்தோடு வாழ விரும்பினாள்; உலகம் சிரித்தது; முடிவு என்ன?.........

•

புதன், ஞாயிறு மாலை 6-30:
மற்ற நாட்கள் இரவு 9-30:

வரியுட்பட கட்டணம்:—

4-0-0; 2-12-0; 1-10-0; 0-13-0; 0-6-6.

வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பி 1, 2, 3 வது வகுப்புகள் ரிசர்வ் செய்து கொள்ளலாம்.

Wrapper Printed at the Senguntha Mithran Press, Madras 1